Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (8-10-66) இதழ் 239

பராபவ புரட்டாதி 22 ஜ. ஆகிர் 22 சனிக்கிழமை

முல்லா பீடிகள்
MULLA BEEDIES JAFFNA
MULLA BEEDIES
முல்லா பீடிகள்
TRADE MARK REGD. NO. 24566
MULLA
முல்லா பீடி ஜவ்னா
MULLA BEEDI CO. JAFFNA

### தாய்நாடு திரும்பும் இந்தியர்

சென்னை, ஒக். 7

இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் இந்தியாவுக்கு திரும்பி வரவிருக்கும் இந்திய வம்சாவழியினரில் அதிகமானேர் கேரளத்திலுள்ள ராககுண்டா என்ற இடத்தில் உருவாக்கப்படும் ஜவுளி ஆலையில் வேலைக்கு அமர்த்தப்படுவர். இதற்காக மத்திய அரசாங்கம் 500 ஏக்கர் நிலம் ஒதுக்கியிருக்கிறது.

## துரையப்பா அப்பீல்:

# பிரிவிகவுன்சிலுக்கு மனு செய்ய அனுமதி

## "மந்திரியின் செய்கை கொடுங்கோன்மையானது"

—நீதியரசர்

—நமது நிருபா கே. நடராசா—

கொழும்பு, வெள்ளி

ஒரு தனிப்பட்ட நபரால் உள்ளூராட்சி மன்றம் ஒன்றை கலைத்துவிட முடியும் என்பது என்னைப் பொறுத்த வரை 'கொடுங்கோன்மை'யாகவே தெரிகிறது. இந்த 20-ம் நூற்றுண்டில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஜனநாயக ஆட்சி மன்றம் ஒன்று ஸ்தலஸ்தாபன அமைச்சர் ஒருவரால் கலைக்கப்பட்டது பயங்கரமான செய்கை என்றே நான் கருதுகின்றேன்.

உள்ளூராட்சி மந்திரி யாழ்ப்பாணம் மாநகரசபையைக் கலைத்தது சம்பந்தமாக ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டால் அளிக்கப்பட்ட தீர்ப்பொன்றை ஆட்சேபித்து பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்ய அனுமதி கோரி முன்னுள் யாழப்பாணம் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தாக்கல் செய்திருந்த மனுவை அனுமதித்து தீர்ப்பளிப்பதற்கு முன்பாக நீதியரசர் அபயசுந்தர இன்று மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையை உள்ளூராட்சி மந்திரி கலைத்துவிட்டு அதனை பொறுப்பேற்று நடத்த மூன்று விஷேச ஆணையாளர்களை நியமித்ததை ஆட்சேபித்து முன்னுள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா சுப்ரீம்கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். அதனை விசாரித்த பிரதம நீதியரசரும், நீதியரசர் சிவசுப்பிரமணியமும் மந்திரியின் நடவடிக்கையில் தலையிடமுடியாது என்று தீர்ப்பளித்திருந்தனர். இந்தத் தீர்ப்பையும் ஆட்சேபித்து பிரிகவுன்சிலுக்கு மனுச்செய்ய அனுமதி யளிக்கும்படி திரு. துரையப்பா மனுவொன்றை தாக்கல்செய்தார். அம்மனு நீதியரசர் அபயசுந்தர நீதியரசர் சிவசுப்பிரமணியம் ஆகியவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்று அனுமதி வழங்கப்பட்டது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு மன்றத்தை அந்த மக்களின் கருத்தை அறியாமல் மந்திரியொருவர் கலைத்து விடுவது பயங்கரமான செய்கையாகும் என்று கூறிய நீதியரசர் அபயசுந்தர, உள்ளூராட்சி மன்றம் ஒன்றைக் கலைத்து விடும் உரிமை மந்திரிக்கு இருப்பதாக நான் நம்பவில்லை. அப்படியே இருந்தாலும் அதனை மாற்றுவது அவசியம். அப்படிச் செய்வதற்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றுல்தான் சாத்தியமாகும் என்று குறிப்பிட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கு ஸ்ரீமாவோ தந்திமூலம் அழைப்பு

### இன்றைய குழுக்கூட்டத்துக்கு வரும்படி

கொழும்பு, சனி

எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கெல்லாம் தந்தி பறந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இந்தத் தந்தியை அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இன்று அவசரமாகக் கூட்டப்படும் எதிர்க்கட்சி குழுக் கூட்டத்தில் தவறாது சமூகமளிக்கும்படி அங்கத்தவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பாரிலிமெண்டில் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த தொடம்போ முதலாளி சம்பந்தமான நம்பிக்கையில்லாத்தீர்மானம் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் பாரிலிமெண்டுக்குச்செல்லாது பகிஷ்கரிப்பதென முடிவு செய்திருந்தனர். இதுசம்பந்தமாக புதிய முடிவொன்றைச் செய்வதற்கே எதிர்க்கட்சி அங்கத்தவர்களை இன்று நடக்கும் எதிர்க்கட்சிக் குழுக்கூட்டத்துக்கு வரும்படி தந்தி அனுப்பியிருப்பதாக தெரியவருகிறது.

## மீன்பிடிக்கச் சென்ற 10 பேரைக் காணேம்!

### மயிலிட்டிக் கரையில் பரிதாபக் காட்சி

பலாலி, வெள்ளி

மீன்பிடிக்கச்சென்ற 10 மீனவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை. இதனல் கவலைகொண்ட அவர்களின் உறவினர்களும் நண்பர்களும் மயிலிட்டி கடற்கரையில் காத்திருக்கிருர்கள். பெண்களில் பலர் கதறி அழுது நிற்கிருர்கள்.

நேற்று காலநிலை மோசமாக இருந்ததாலும் கடும் மழை பெய்ததாலும் மீன்பிடி படகுகள் திசைதவறிப் போனதாலேயே இந்த மீனவர்கள் இன்னும் திரும்பாததற்கு காரணம் என்று கருதப்படுகின்றது.

மீன் பிடிக்கச் சென்ற மூன்று இயந்திரப்படகு

(8-ம் பக்கம் பார்க்க)

### லண்டன் ஹைகமிஷனர்?

இலங்கையின்லண்டன் ஹைகமிஷனர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா இம்மாதம் இறுதியில் தமதுபதவியிலிருந்து விலகிக் கொள்கிருர், உயர்தரக்கல்வி மசோதாவின் தலைவராக இவர் நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

லண்டன் ஹைகமிஷனர் பதவிக்கு மந்திரி சபையிலுள்ள ஒருவரின் பெயரும், புதிதாக நியமனம் பெற்ற முடிக்குரிய வழக்கறிஞர்ஒருவரின் பெயரும் அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றன.

## C. W. E. ஜவுளிகள்

இன்று தொடக்கம்

எமது ஸ்தாபனத்தில் (C.W.E.) கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தாரின் ஜவுளி வகைகளை சகல ஜவுளி வர்த்தகர்களும் மொத்தமாகக் கொள்வனவு செய்து கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ருேம்.

## ஆ. அப்பையா அன் கோ.

(C.W.E. பிரதான மொத்த விற்பனையாளர்கள்)

82, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.

போன்: 50

## தமிழரசுத் தலைவர்கள் 11-ல் பிரதமரைச் சந்திப்பர்

கொழும்பு, சனி

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பிரதமர் டட்லி சேனநாயக்காவை இம்மாதம் 11-ம் திகதி சந்தித்துப் பேசவிருக்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பப்படும் விஷயங்குறித்தும், போதனமொழி பற்றியும் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்.

கொழும்பில் இம்மாதம் 18-ம் திகதி தமிழரசுக்கட்சி பொதுச்சபைக் கூட்டம்கூடி இறுதிமுடிவொன்று செய்யவிருப்பதைத் தொடர்ந்தே பிரதமரைத்தலைவர்கள் சந்திப்பதாகத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் கமிட்டிக்கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவிருக்கிறது காரியக்கமிட்டிக் கூட்டமும் இன்று நடைபெறும்.

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518
தந்தி: 'யப்பான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

நெசவாளர்:-

கைத்தறி நெசவு வேலைகளில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. இடம் கந்தர்மடம். விபரங்களுக்கு சரஸ்வதி கைத்தறி நெசவு ஸ்தாபனம், C/o சரஸ்வதி ஸ்ரோஸ். 55, பெரியகடை, யாழ்ப்பாணம். 1124

தாதிகள்

அனுபவமுள்ள தாதிகள். மருத்துவத் தேர்ச்சி விரும்பப்படும். உடனடியாக வேலை ஏற்கவேண்டும். 17-10-66-க்கு முன் விண்ணப்பிக்கவும். வைரியதரிசி, தீவுப்பகுதிஐக்கிய வைத்திய சாலை, ஊர்காவற்றுறை. 1407

## கல்வி

வகுப்புக்கள்

G. C. E. (O. L) G. C. E. (A. L.) மாணவர்கட்கு அரிய சந்தர்ப்பம். வர்த்தகம், கணக்கியல், ஆங்கிலம், சரித்திரம், பூமிசாஸ்திரம். சிறந்த அனுபவமுடைய இரட்டைப் பட்டதாரியால் பயிற்றப்படும். 121/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொடர்புகொள்ளவும். 1406

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, சிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலேக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

பெற்றல் புத்தகம்

கைத்தறி நெசவாளர்களுக்கு தேவையான 1966-ம் ஆண்டு தயாரித்த பெற்றல் புத்தகங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வீ. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். எஸ். சவிரிமுத்து 73, காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம். 1408

## சேவை

தையல் மெஷின்:-

தையல் மெஷின்கள் உங்கள் திருப்திக்கு திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப் பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம். அருணா ஏஜன்ஸீஸ், அளவெட்டி. 1289


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
மாலாசிங் நடித்த
**அண்க் மிச்சோனி**
(ஹிந்தி)

**நியூ காலிங்கள்** (இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த
**அன்பு எங்கே?**

**மகாத்மா தியேட்டர்** (நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி நடித்த
**திருவிளையாடல்**

**2வது வெற்றி வாரம்!**
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவம் (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) விஜயா (கட்டுக்கலைப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தீவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
**பணம் படைத்தவன்**


## ஜெயந்தி விழா

நவாலி, வியாழன்

காந்தி ஜெயந்தி விழா மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் மறுமலர்ச்சி மன்றத்தினரால் கொண்டாடப்பட்டது. விழா மன்றத் தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது உரையில் காந்தியத்திற்கும் மன்றத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கியதுடன் உலகிற்கு இயந்திரமய வாழ்வு ஏற்றதல்ல வெனவும் ஆனல் யந்திர மற்ற சமுதாயத்திலும் முன்னேற்றம் காணமுடியாதென்றும் காந்தியடிகள் கொண்டிருந்த கருத்தை உலகம் தற்போது உணர்ந்துவருகிறது என்றார்.

சுழிபுரம் பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா பேசுகையில், சமூகத்தில் தீண்டாமை உள்ளத்தால் ஏற்படவேண்டுமேயன்றி வாக்கினுல் மட்டும் ஏற்படுத்த முடியாது என்றார்.

பண்டிதை செல்வி க. மாக்கியம் பேசுகையில், காந்தியடிகள் ஒழுக்கவாழ்விற்கு முதலிடம் அளித்ததுடன் சத்தியநெறியிலே நடந்து உலகிற்கோர் உதாரண புருஷராக விளங்குகிறார் எனக் குறிப்பிட்டார்.

## அராலி பஸ்சேவை

வட்டுக்கோட்டை, வெள்ளி

அராலி கொட்டைக்காடு ஊடாக சங்கானைக்குச்செல்லும் பஸ் சேவை சீர்கேடடைந்துள்ளதாக பிரயாணிகள் யாழ். இ. போ. ச. முகாமையாளருக்குப்புகார் செய்துள்ளனர்.

பிரதானமாக மாணவர்களும் வேலைஸ்தலங்களுக்கு செல்லும் உத்தியோகத்தர்களுமே இதனல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.





## கொழும்பு

**சனி 8 - 10 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 [illegible] காணம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் மன்றம்.

இரவு 6-10 கிராமச்செய்திகள், 6-15 கிராமசஞ்சிகை. 6-45 வயலின்—செல்லமணி காராளசிங்கம், 7-15 செய்திச் சுருள், 7-30 குங்குமம்—மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச்சித்திரம், 9-45 எங்கள் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.


REGAL—JAFFNA
NOW SHOWING
NIGEL PATRICK
MARGARET WHITING
in
The Rank Organisation's
THE INFORMERS


## ஆசிரியகலாசாலை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் வித்தியா பகுதியாரால் நடாத்தப்பட்ட ஆசிரிய கலாசாலைகளின் இறுதிப்பரீட்சைக்கு கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலையிலிருந்து தோற்றிய 21 ஆசிரியமாணவரும் பூரண சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தோரின் பட்டியல் வருமாறு:

அழகரத்தினம். க, அம்பலவாணர். பொ, பர்னண்டோ. வ. லூ, கந்தசாமி. ச, நடராசா. நா, நாகராசா. வை, நமசிவாயம். க, பரமராசு. க, பத்மநாதன். க; இராசரத்தினம் மு, சபாரத்தினம். வை, சதாசிவம். இ, செல்லையா. க சோமசுந்தரம். ஆ, சுப்பிரமணியம். இ, சுப்பிரமணியம். செ, தங்கரத்தினம். நா க, தியாகராசா. க, துரைராசா. க, வேலாயுதபிள்ளை. கி, யோசேப்பு. கி.

வடபகுதி

## பிரதான பாதை சீமெந்து ரோட்டாகும்

மாவிட்டபுரம், வெள்ளி

வடபகுதி பிரதானபாதைக்கு சிமெந்து ரோட் போடுவது சம்பந்தமான பரிசீலனை இப்பொழுது நடைபெற்று வருகிறது.

காங்கேசன்துறை—யாழ். பிரதான வீதியை சிமெந்து ரோட்டாக்கிபோக்குவரத்து வசதியை அளிக்க பொதுமராமத்து இலாகா ஏற்பாடு செய்து வருகிறது.

சுன்னுகம் பொலிஸ் நிலையத்தில் இருந்து 440 யார் தூரத்துக்கு இப்பொழுது சிமெந்து ரோட் பரீட்சார்த்தமாகப் போடப்படுகிறது. இது வெற்றிஅளிக்குமாயின் சிமெந்து ரோட் விஸ்தரிக்கப்படும் என்று தெரிகிறது.

## 'பஸ்சேவை சீர்கேடு'

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையே நடைமுறையில் இருக்கும் பஸ் சேவையின் சீர்கேடுபற்றி தீவுப்பகுதி எம். பி. யைப் பேட்டிகண்டு பேசுவதற்கு ஊர்காவற்றுறை செண். ஜேம்ஸ் சனசமூக நிலையம் தீர்மானித்துள்ளது.

ஊர்காவற்றுறை பஸ் நிலையத்தில் பிரயாணிகள் தங்குவதற்கு ஓர் நிலையம் அமைத்துத்தரவேண்டுமெனவும் ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்குமிடையே 'மாருதப்புரவ' என்ற யந்திரப்பாதையைத் திருத்தி சேவையில் ஈடுபடச் செய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஊர்காவற்றுறையில் ஓர் நெசவு நிலையத்தை அமைத்துத்தரவேண்டுமெனவும் தீவுப்பகுதி எம். பி. யை இந்நிலையம் கேட்டுக்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 25 ரூபாய் அபராதம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கார்த்தி கிருஷ்ணபிள்ளை என்பவர் தான் ஓட்டிச்சென்ற வாகனத்தில் 13 பேரை மேலதிகமாக ஏற்றிச்சென்ற குற்றத்தை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜெ. பேரிட்டிஸ் முன்னிலையில் ஒப்புக்கொள்ளவே, மாஜிஸ்திரேட் 25 ரூபா அபராதம் விதித்தார்.


## விளம்பரம்

**பொலிசி இல. 4633983**

கதிர்காமர் நல்லதம்பி இராசநாயகம் என்பவரின் ஆயுள்மீதுஎடுக்கப்பட்டபுருடென்ஷல் அஷ்ஷுரென்ஸ் கம்பனி லிமிட்டெட்டின் பொலிஸி பத்திரம் இலக்கம் 4633983 காணுமல் போய்விட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. அதைக்கண்டெடுத்தவர்கள் அல்லது அதுடன் எவ்வித உரிமையும் கோருபவர்கள் மனேஜர், புருடென்ஷல் அஷ்ஷுரென்ஸ் கம்பனி லிமிட்டெட், தபால் பெட்டி இல. 360, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு எழுதும்படி கேட்கப்படுகின்றனர். இன்றுமுதல் ஒரு மாதத்துக்குள் தொடர்புகொள்ளாவிடின் எவ்வித கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஜெ. அப்பாத்துரை,
புருடென்ஷல் அஷ்ஷுரென்ஸ் கம்பனி லிமிட்டெட்டுக்காக
டெல்மேஜ் பேர்ஸித் & கம்பனி லிமிட்டெட்.
1311

**அறிவித்தல்**

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றிய உ. சங்கரன் என்பவர் 6-10-66 விருந்து விலகிக்கொண்டார். அவருக்கும் ஸ்தாபனத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை என அறிவிக்கின்றோம்.

P. S. ஜெகநாதன் செட்டியார்,
151, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
1312

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
உள்ளூராட்சிப் பகுதி

என் 2570 அச்சுவேலியில் குச்சில் வாசிகள் வீடமைப்புத் திட்டத்தில் ஏ. பி. சி. டி. தொகுதி வீடுகளைக் கட்டுதல். கேள்விகள் முடிவுதிகதி 22-10-66.

பொது வேலைத் திணைக்களம்

என். 2528 தலைமன்னர் தபாற்கந்தோர் கட்டிடங்களுக்கு மேலதிக வேலைகளும், திருத்தங்களும் செய்தல். கேள்விகள் முடிவுதிகதி 26-10-66.

இதன் முழு விபரங்களுக்கும் 7-10-66 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 90


## இரத்த தானம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் இரத்ததானம் செய்தனர்.

## நியமனம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இலவாலை அர்ச். சந்தியோகுமையோர் கோவில் புதிய கட்டளைக் குருவாக வண. ஜோ. மிக்கேல் சுவாமியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும்: பிரிட்டனின் ஆறு அம்சதிட்டத்தை

# ரஷ்யா நிராகரித்தது

## "வெளித் துருப்புகள் வெளியேறிய பின்னரே ஜெனிவா மகாநாடு"

மாஸ்கோ, அக்டோபர் 7

வியட்னும் நெருக்கடியை முடிவுக்குக்கொண்டு வரும் பொருட்டு பிரிட்டன் வெளியிட்டிருந்த ஆறு அம்சத்திட்டத்தை சோவியத் யூனியன் நிராகரித்துவிட்டதாக மாஸ்கோ வானொலி நேற்று அறிவித்தது.

வியட்னும் நெருக்கடிக்குத் தீர்வுகாண 1954-ம் ஆண்டு ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டவேண்டுமென்பதில் எந்தவிதப் பலனும் இருக்கமாட்டாது என்றும் தென்வியட்னுமிலிருந்து அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டு துருப்புகள் யாவும் வெளியேறிய பின்னரே இப்படியான யோசனைகள் குறித்து ஆலோசிக்கமுடியுமென்றும் இது நடவாத பட்சத்தில் ஆக்கிரமிப்பு நாட்டுக்கும் ஆக்கிரமிப்புக்குள்ளாகும் நாட்டுக்குமிடையே வித்தியாசம் தெரியாது என்றும் மாஸ்கோ வானொலி அறிவித்துள்ளது.

### லண்டனில்

இதற்கிடையே லண்டனில் முடிவடைந்த தொழிற் கட்சி (அரசாங்க) வருடாந்த மகாநாட்டில் வடக்கு வியட்னுமில் அமெரிக்கா குண்டு வீச்சு நடத்துவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று அதிகாரபூர்வமில்லாத தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

### பிரிட்டனின் யோசனைகள்

இந்த மகாநாட்டில் தான் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி புதிய யோசனைகளை வெளியிட்டிருந்தார்.

○ தென் வியட்னுமிலிருந்து அமெரிக்கத் துருப்புகளும் வடக்கு வியட்னும் துருப்புகளும் வெளியேற வேண்டும்.

○ சைப்பிரஸில் மாதிரி ஐ. நா. சமாதானப் படையொன்று அங்கு கண்காணிக்கவேண்டும்.

○ வியட்னும் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட சகல நாடுகளும் மகாநாட்டு மேசைக்கு அழைக்கப்படவேண்டும்.

○ 1954-ம் ஆண்டு ஜெனிவா மகாநாட்டைக் கூட்டவேண்டும்.

○ குண்டு வீச்சு நிறுத்தப்படவேண்டும்.

○ பொதுத்தேர்தல் நடைபெறவேண்டும்.

### ஜோன்ஸன் வரவேற்பு

பிரிட்டனின் புதிய யோசனைகள் குறித்து அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவிக்கையில் ஆறு அம்சத்திட்டத்தைத் தாம் வரவேற்பதாகக் கூறினார்.

வியட்னும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு புதிய முயற்சிகள் எடுக்கப்பட்ட பொழுதிலும் பிரச்சினை முழுவதுமாக இருக்கிறதென்றும் புதிய அபிவிருத்தி எதுவும் ஏற்படவில்லை என்றும் கூறினார்.

### யுதாண்ட்

இதற்கிடையே ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வியட்னும் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாக ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தஞ்சையில் சர்வகட்சி போராட்டம்

தஞ்சை, அக். 7

தஞ்சை மாவட்டம் முழுவதும் நேற்றுமுன்தினம் கடைகளும் ஹோட்டல்களும் மூடப்பட்டன. சர்வகட்சி போராட்டமான கடை அடைப்பு போராட்டத்தில் பொதுமக்கள் கூடியளவு கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உணவுப் பற்றாக்குறையை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வரவும் பங்கீட்டரிசியை அதிகரிக்கக்கோரியும், தஞ்சைமாவட்டத்தில் எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து போராட்டம் நடாத்திவருகின்றனர்.

போராட்டத்தின் முதல் கட்டமாக அரசாங்க காரியாலயங்கள் முன்னால், தொண்டர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்தார்கள். இதனைத் தொடர்ந்து தஞ்சைமாவட்டம் முழுவதும் கடையடைப்பு நடைபெற்றது.

## பிரான்ஸில் யாழ்ப்பாணப் பத்திகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட ஊதுபத்திகள் பிரான்ஸ் நாட்டிலும் கமழுகின்றன!

அண்மையில் இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சில உல்லாசப் பிரயாணிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்தபொழுது, அவர்கள் கண்களில் யாழ்ப்பாண ஊதுபத்திகள் தென்பட்டன. அவர்கள் தாய்நாடு சென்று கோரிக்கை விடுத்திருந்ததைத்தொடர்ந்து இங்குள்ள எஸ். சுப்பிரமணியம் கம்பெனியார் தாங்கள் தயாரித்த ஊதுபத்திகளை அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்,

## வறிய பிள்ளைகளின் கல்விப் பெறுபேறுகள்

### குறைவாகவே இருக்கும்

### என்கிறார் ஆராய்ச்சியாளர்

புதுடில்லி, அக். 7

பெற்றோரின் பொருளாதார நிலைமையைப் பொறுத்தே பிள்ளைகளின் கல்விப் பெறுபேறுகள் இருக்கின்றன என்று பஞ்சாப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பிரகாஷ் சிங் இதசம்பந்தமாக நடத்திய ஆராய்ச்சியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

மிகவும் குறைந்த வருமான முள்ளவர்களது பிள்ளைகள் கல்வித் துறையில் மிகக் குறைந்த பெறுபேறுகளையே பெறுகிறார்களென்றும், பெற்றோர்களின் கல்வித்தரத்தைப் பொறுத்தே பிள்ளைகளின் கல்விநிலை அமைகிறது என எண்ண இடமுண்டு எனவும் தந்தையின் கல்வி நிலைக்கும் தாயின் கல்வி நிலைக்கும் அதிக வித்தியாசமிருந்தால் பெறுபேறுகள் இதற்கு நேர்மாறாக இருக்கலாமென்றும் திரு. சிங் கூறியுள்ளார்.

ஒருபிள்ளையின் மூத்த சகோதரர்களின் உயர் கல்வித்தரமும் அவனின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாக இருக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இளம்பெற்றோரின் பிள்ளைகள் வயோதிப பெற்றோரின் பிள்ளைகளைவிட வகுப்பில் திறமைசாலிகளாக இருப்பார்கள் என்பதுவும் திரு. சிங் கண்ட முடிவுகளில் ஒன்று.

## பிரிட்டனில் பயிலும் இலங்கை விமானி

லண்டன், அக். 7

இலங்கை ராயல் விமானப் படையைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தற்சமயம் பிரிட்டனில் விசேஷ பயிற்சிபெற்று வருகிறார். இரன்வெல் நகரிலுள்ள பிரிட்டிஷ்ராயல் விமானப் படை கல்லூரியில் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு இப்பொழுது அவர் மன்செஸ்டருக்கு சமீபமாகவுள்ள விமானம் கட்டும் கம்பனி ஒன்றில் பயின்று வருகிறார்,

24 வயது நிரம்பிய விமானியான திரு. நாகநாதன் குணரெத்தினம் திவிநெகசியைச் சேர்ந்தவர். விண்வெளி விஞ்ஞானம், பொறியியல், ஆகிய துறைகளில் பயின்று முடிந்ததும் அவருக்கு இரு கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன. இப்பொழுது அவர் 'ஹோக்கர்' விமானக் கம்பனியில் விமான அமைப்பு, உற்பத்தி சம்பந்தமான விஷயங்களில் பயின்றுவருகிறார்.

## "மேடையில் பேசினால் சாதி ஒழியுமா?"

காஞ்சிபுரம், அக். 7

"மேடையில் ஏறி சாதியில்லையென்று பேசிவிட்டால், சாதிஒழிந்துவிடுமா? மேடையில் சாதி இல்லை என்கிறார்கள். ஆனால் திரைமறைவில் தன்னுடைய சாதியினருக்கே வேலை கொடுக்கின்றனர்."

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற உழைப்பாளர் கட்சி பொதுக்கூட்டத்தில், திரு. இராசரத்தின நாயகர் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

"அவர் தொடர்ந்து கூறியதாவது: தமிழ் நாட்டின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் வன்னியர்கள். ஆனால் நீதிபதிபோன்ற உயர்பதவிகள் வன்னியர்களுக்குகிடைப்பதில்லை. காங்கிரஸ் காரர்கள் தங்கள் சாதிக் காரருக்கே எல்லாப் பதவிகளும் கொடுக்கின்றனர். ஆதலால் காங்கிரஸ் ஆட்சியை நாம் மாற்ற வேண்டும்."

## பெண் விஞ்ஞானிகள் சர்வதேச மகாநாடு

லண்டன், அக். 7

பெண் விஞ்ஞானிகள், பொறியியலாளர்களைக் கொண்ட சர்வதேச மகாநாடு ஒன்று அடுத்த ஆண்டு ஜூலை மாதம் கேம்பிரிஜில் நடைபெறவிருக்கிறது. லண்டனிலுள்ள பெண் பொறியியலாளர் சங்கம் இம்மகாநாட்டை ஒழுங்கு செய்துள்ளது. உலக உணவு உற்பத்தி, தொழில் நுட்பம் மூலம் உணவுஉற்பத்தியைப் பெருக்குவது போன்ற விஷயங்கள் இம்மகாநாட்டில் முக்கியமாக பரிசீலனை செய்யப்படவிருக்கின்றது. 80 நாடுகளைச் சேர்ந்த சுமார் 450 பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசிய அகதிகளுக்கு உதவ ஐரோப்பாவில் இயக்கம்

லண்டன், அக். 7

ஆசிய-ஆபிரிக்க நாடுகளிலுள்ள அகதிகளுக்கு உதவும் வகையில் 16 ஐரோப்பிய நாடுகளில், நிதி திரட்டும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இம் மாதம் 24-ம் திகதியில் ஆரம்பித்து ஒருவாரம்வரை நடைபெறவிருக்கும் இந்த இயக்கத்தில் பிரிட்டனிலுள்ள பல தர்மஸ்தாபனங்கள் பங்கு கொள்கின்றன.

நெதர்லாந்து இளவரசர் பேர்ன்ஹாட் இந்த இயக்கத்தை ஒழுங்கு செய்துள்ளார். இந்த இயக்கத்தால் திரட்டப்படும் நிதி இந்தியாவிலுள்ள திபேத்திய அகதிகளுக்கும் உலகத்தின் வேறு பகுதிகளிலுள்ள அகதிகளுக்கும் உதவியாகவழங்கப்படும்.

அக்டோபர் 24-ம் திகதி வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் நடைபெறவிருக்கும் ஆராதனைகளை அடுத்தே பிரிட்டனில் இந்த நிதிதிரட்டும் இயக்கம் ஆரம்பமாகும். இந்த ஆராதனைகளில் பிரிட்டிஷ் அரசியல்வாதிகள், அகதிகளுக்கான ஐ. நா. ஹைகமிஷனர் இளவரசர் சாருதீன் ஆகியோர் கலந்து கொள்வர்.

## யுதாண்டுக்கு சுவர்ண்சிங் விருந்து

நியுயோர்க், அக். 7

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டுக்கு இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் நேற்று பகல் விருந்தளித்தார். இந்த விருந்து வைபவத்தில் ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோ, மெக்சிக்கோ வெளி நாட்டு மந்திரி, ஐ. நா.வுக்கான அமெரிக்க பிரதிநிதி திரு. கோல்ட் பேர்க் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதி தேர்தல்

### கென்னடி நிற்கமாட்டார்

வாஷிங்டன், அக். 7

1968-ல் நடைபெறவிருக்கும் அடுத்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குத் தாம் நிற்கப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் சகோதரர் செனட்டர் ரொபர்ட் கென்னடி தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் இரண்டு ராஜ்யங்களில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

### பொலிஸ் துப்பாக்கி பிரயோகத்தில் பன்னிரண்டுபேர் பலி

புதுடில்லி, அக். 7

உத்தர பிரதேசத்திலும் மத்திய பிரதேசத்திலும் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள், வன்முறைச்செயல்களைத் தொடர்ந்து பொலிஸார் பல இடங்களிலும் நடத்திய துப்பாக்கிப் பிரயோகங்களினால் 12 பேர் மாண்டனர் என்றும் ஏராளமானவர்கள் காயமடைந்தனர் என்றும் இங்கிருந்து வெளியாகும் உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று உத்தர பிரதேசத்தில் ஓரளவு அமைதி நிலவியபொழுதிலும் டேராடூனிலும் [illegible] பொலிஸ் காவல் இருந்தது. மாணவர்கள் "வேலைநிறுத்தம்" செய்தனர். அலகாபாத்திலும் கான்பூரிலும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. டேராடூனிலும் குவாலியரிலும் கல்வி ஸ்தாபனங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன.

பாட்னாவில் நிலைமையில் மாற்றம் ஏற்பட்ட பொழுதிலும் ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள்மீதான தடை உத்தரவு தொடர்ந்து அமுலில் உள்ளது.

ஆக்ராவுக்கருகே மாணவர்கள் நேற்று புகையிரத நிலையங்களுக்குச் சென்று டிக்கட்டுகளைச் சூறையாடினர். புகையிரத நிலையத்தில் இருந்த தஸ்தாவேஜுகளைத் தீக்கிரையாக்கினர். இதனைத் தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்தார்.

அலகாபாத்தில் மாணவர்கள் நேற்று பஸ் நிலையமொன்றுக்கு தீவைத்தனர். மாணவர்கள் கலகத்தைத் தொடர்ந்துஅலகாபாத் பல்கலைக்கழகம்மூடப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வீச்சினால் பல பொலிஸ் கான்ஸ்டபிள்களும் அதிகாரிகளும் காயமடைந்தனர். இதுவரை வடஇந்தியாவில் ஆயிரத்துக்குமதிகமான மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

துன்பங்களினால் தாழ்ந்து கலங்காது எழுந்து வாழ்க்கையின் உன்னதமானதும் மகிமை வாய்ந்ததுமான இலட்சியங்களை நாடு. துன்பம் உன்னைத் தீண்டுவதால் வாழ்க்கையின் மாட்சி வாய்ந்த இயல்புகள் உன்னில் வெளிப்படட்டும்.

—சுவாமி இராமதாஸர்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily; Post Box 49, JAFFNA.
Telegrams; EELANADU Jaffna; Telephone 1310

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி மீ 22 உ. (8-10 66)


## கல்வியில் சம வாய்ப்பு

சமீபத்தில் வெளிவந்த கல்விமந்திரியின் வெள்ளை அறிக்கையில் 8-ம் வகுப்பு முடிவில் மாணவர்களைத் தேர்வுப் பரீட்சை மூலம் பாடசாலைகளில் அவர்களது தகைமையைக் கணித்து அவர்களைப் பல கலைக்கழகக் கல்விக்குத் தெரிவு செய்வதுவும் தொழிற் கல்விக்கு அனுமதிப்பதுவும் ஒரு பிரதான அம்சமாகக் கூறப்பட்டுள்ளது.

8 வருட காலத்தில் சம அந்தஸ்து, சம வசதியுள்ள பாடசாலைகளில் தமது பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தாலன்றிப் பெற்றோர்கள் இவ்வித பிரிவுக்குச் சம்மதிக்க மாட்டார்கள்.

ஜனநாயக நாடுகளிலும் ரஷ்யா, சீனா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளிலும் மாணவர்கள் ஆரம்ப வகுப்புகளிலிருந்து சம வாய்ப்புடனேயே கல்வி கற்கவேண்டுமென்ற கொள்கை அனுசரிக்கப்பட்டுவருகிறது.

இந்தநாடுகளில் ஆரம்ப பாடசாலைகளில் பாகுபாடின்றிச்சமமான கட்டடங்கள், உபகரணங்கள் சமமான தகுதிபெற்ற ஆசிரியர்களின் சேவை ஆகியன அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வித சம அந்தஸ்தான கல்வி வழங்கப்பட்டால் 14 வயதிலாவது தமது பிள்ளைகளைத் தகுதிக்கேற்ப பிரிப்பதற்குப் பெற்றோரின் ஆட்சேபம் அதிகம் இருக்கமாட்டாது. ஆனால் எமது நாட்டு ஆரம்பபாடசாலைகள் சம அந்தஸ்து இல்லாமலேயே இயங்கிவருகின்றன. நகரங்களுக்கப்பால் இருக்கும் கிராமங்களில் ஆரம்பப் பாடசாலைகள் மிகக் கேவலமான நிலையிலேயே இருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். எமது நாட்டில் கிராமங்களில் வசிக்கும் பாடசாலை மாணவர்களை நகரங்களிலிருக்கும் பாடசாலை மாணவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் கிராமப்புற மாணவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.

இலங்கையிலிருக்கும் ஆரம்பப்பாடசாலைகளை ஒரே சீராகச் சீர்திருத்தி அமைத்தலும் இவைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் அளித்தலும் மிக அவசியமானது.

வசதியுள்ளவர்கள் தமது பிள்ளைகளை நகரங்களிலிருக்கும் பெரிய பாடசாலைகளுக்கே அனுப்பும் வழக்கம் இப்போதும் இருந்துவருகிறது. தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளும் பிற்போக்கு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளும் குறைந்த தராதரமுடைய ஆரம்ப பாடசாலைகளிலேயே தமது பிள்ளைகளைக் கல்வி பெறவிடவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். இந்தப் பிள்ளைகள் இவ்விதபாடசாலைகளில் கற்பதால் உயர்வகுப்புகளில் தேர்ச்சி பெற வாய்ப்பு அற்றவர்களாகி விடுகிறார்கள்.

இவ்வித பாகுபாட்டை நீக்க அரசாங்கம். ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும், சகல ஆரம்ப பாடசாலைகளும் சம அந்தஸ்து பெற்று இயங்குவதற்கு மேலதிக செலவு செய்வதற்கு அரசாங்கம் தயாராகஇருக்க வேண்டும்.

அரசாங்கம் அதிக பணம் செலவளித்து பிள்ளைகளுக்கான கல்வியைப் பொறுப்பேற்று அளித்துவரும்போது எல்லாப் பிள்ளைகளுக்கும் சமசந்தர்ப்பம், சம வாய்ப்பு வழங்காவிட்டால் பல பிள்ளைகளிடையே வீணான மனக்கசப்பும் அதிருப்தியுமே நிலவும். இதனைக் கருத்தில் கொண்டு ஆரம்ப வகுப்புகளிலேயே மாணவர்கள் எல்லோரும் சம வாய்ப்புப் பெற்று கல்வி கற்க வழி அமைக்க வேண்டும்.

## நாதியற்றவர்கள்

இந்தியா சுதந்திரம் பெறுமுன்னரே கேரளாவில் பிச்சை கேட்பது சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டது.

நமது நாட்டில் சமூக சேவைப்பகுதியினர் அநாதரவானவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் தருமச் சம்பளம் உதவிவருகிறார்கள். இருந்தும் நமது ரயில் வண்டிகளிலும் பஸ்களிலும் இப்பொழுது தங்களை அநாதைகள் என்று சொல்லிக்கொள்பவர்களும் அங்கவீனர்களும் அதிகமாகத்திரிந்து கொண்டிருக்கிறார்கள். இது பொதுமக்களுக்கு சற்றுஇடைஞ்சல் கொடுப்பதாகவுமுள்ளது.

இவ்விதம் நாதியற்றவர்களுக்கு நல்லது செய்வதற்கு அரசாங்கம் மேலும் உதவியளிக்கமுன் வரவேண்டும்.

இங்கு வரும் வெளிநாட்டவர்கள் நம் நாட்டைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்வதற்கும் இது பெரிதும் உதவும். இது விஷயத்தில் உள்ளூராட்சி மன்றங்களும் கவனமெடுத்து தமது எல்லைக்குட்பட்ட இடங்களில் இவர்கள் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் அலைவதைத்தடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும். இது ஒரு புனிதகடமை என்பது உணரப்படவேண்டும்.

கருத்தரங்கு

## முதலாளி-தொழிலாளி இருவரது மனப்பான்மையும் மாறவேண்டும்

### (நமது விசேஷ நிருபர்)

(நேற்றைய தொடர்ச்சி)

தொழிலாளியின் இக்கட்டான நிலையில் உண்மையிலேயே தொழிலாளிக்குக்கை கொடுத்துதவ வேண்டுமென்று விரும்பும் தொழிற் சங்கங்கள், பல வழிகளிலும் உதவ முன்வரலாம்.

முதலாவதாக தொழிலாளர்களுக்குஇந்நாட்டிலுள்ள சட்டத்தின் கீழ் என்னென்ன உரிமைகள் உண்டு. அவர்கள் முதலாளிகளினால் அநியாயமான முறையில் வேலை நீக்கம் செய்யப் பட்டாலோ அல்லது வேறெவ்விதமாவது துன்புறுத்தப் பட்டாலோ, அவர்கள் எவ்விதம் பரிகாரம் தேடிக்கொள்ள முடியும் என்ற விஷயங்கள் பற்றிப்பொறுப்புள்ளபெரியதொழிற்சங்கங்கள் அடிக்கடி தொழிலாளர் வகுப்புக்கள் நடாத்த முன்வர வேண்டும். பதவி மோகமும், அதிகாரப் பித்தும் தொழிற் சங்கத்தினருக்கு இருப்பது கூடாது. கடமையுணர்ச்சி தான் அவர்களுக்கு முக்கியமாகத் தேவை. இதைப்பெரும்பாலும் இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் உணரத் தவறி விடுகின்றன அல்லது உணர மறுக்கின்றன.

இவ்வித வகுப்புக்களைத் தங்கள் அங்கத்தவர்களுக்கு மாத்திரமன்றி, தொழிலாளர் பொது நலனை முன்னிட்டு, சகல தொழிலாளருக்கும் நடாத்தலாம். இவ்விதம் தொழிலாளர் பிரச்னைகளில் தலையிட்டு, அவர்களுக்கு முன்னெச்சரிக்கையாகவே தொழிற் துறைச் சட்டங்கள், சட்ட மன்றங்கள் பற்றித் தகுந்த விளக்கமளித்து உதவ முன்வருவது தொழிற் சங்கங்களின் கடமை மட்டுமன்றி, தொழிலாளர் வர்க்கத்துக்கு அவர்கள் ஆற்றவேண்டிய சேவையுமாகும்.

அத்துடன், அரசாங்கம் கடைப்பிடிக்கும் பிற்போக்குத்தனமான கொள்கையும் மாறுந்தாய்மனப்பான்மையும் இந்நாட்டில் முதலாளி-தொழிலாளி உறவு விருத்தியடைய முடியாது செய்துள்ளது.

அரசாங்கம் நியமிக்கும் கைத்தொழில் கோர்ட்டுகள் தொழில் தகராறு சமரசநீதி மன்றங்கள் வெறும் கண்துடைப்பே. உண்மையில் அங்கு சமரசம் என்பது முதலாளியின் வழிக்குத் தொழிலாளியைக்கொண்டு வருவதேயாகும். இதற்கு, முதலாளியின் பணபலமும், செல்வாக்கும், சட்டங்களின் பயமுறுத்தலும் உதவி புரிகின்றன. பாரதூரமான குற்றத்தைச் செய்து விட்ட முதலாளியையும் ஒரு சிறியபணத்தொகையைத் தொழிலாளிக்கு அறவிடச் செய்துவிட்டு, சமரசம் கண்டுவிட்டோம் என்று திருப்திப்படுவது தான் இந்த நீதிமன்றங்களினால் செய்ய முடிகிறது.

கைத்தொழில், தொழில் நீதிமன்றங்களுக்குப்போதிய அதிகாரம் இல்லை. ஒருகுறிப்பிட்ட எல்லைக்குள் தான் அவை இயங்க முடிகின்றன. ஆகவே, இவைகளால் நீதியை நிலை நாட்ட முடியாது. நிலைநாட்டவிரும்பும் சந்தர்ப்பங்களிலும் கூட, சட்டம் அதற்கு இடமளிப்பதில்லை.

தொழிலாளியின் நலனில் உண்மையாகவே அரசாங்கத்துக்கு அக்கறை இருக்குமேயானால், தொழில்நீதிமன்றங்களுக்குக்கூடிய அதிகாரங்களையும், தொழிற்துறை சம்பந்தப்பட்ட விசேஷ

(8-ம் பக்கம் பார்க்க)

## ஊரைச் சுற்றி...

உங்கள் பெயர்களைச் சரித்திர ஏடுகளில் எழுதவும்; இந்தச் சாலையின் சுவர்களில் அல்ல.' இப்படி வேடிக்கையாக உணர்த்தவைக்கும் ஓர் அறிவித்தல் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதியில் ஒட்டப்பட்டிருப்பது பலர் கண்களுக்குப் படவேண்டியதொன்று. ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்கள் ஆஸ்பத்திரியைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்ற அவசியத்தைக் கண்டிப்பாக உணரவேண்டும். 'சுத்தம் சுகம் தரும்' என்பது நினைவிருத்திக்கொள்ளவேண்டிய ஒரு நல்ல பழமொழி. இதனை ஆஸ்பத்திரிக்குச் செல்பவர்கள் அனுசரித்து நடப்பது மிக அவசியம். ஆஸ்பத்திரிச் சுவர்களில் தமது பெயர்களை மட்டுமின்றிச் சினிமா நடிகர்களின் பெயர்களையும்சிலர் கிறுக்கிவிட்டிருப்பதைப் பார்க்கும்போது மிக வேதனையாகத்தான் இருக்கிறது. ஆஸ்பத்திரி, வேடிக்கையாக இருந்து பொழுதுபோக்குவதற்குரிய இடமல்ல. எத்தனையோ ஆபத்தான உயிர்களைக் காத்துவைக்கும் ஒரு புனிதமான இடம். இங்கே வேலை செய்பவர்கள் மட்டுமல்ல இங்கு சிகிச்சைக்காக செல்பவர்களும் இதனைக் கருத்திற்கொண்டு ஆஸ்பத்திரிச் சுவர்களை மட்டுமல்ல, ஆஸ்பத்திரி எல்லைக்குட்பட்டிருக்கும் ஒவ்வொரு பொருளையும் அசுத்தப்படுத்தாமல் [illegible] கடமையென்பது உணரப்படவேண்டிய ஒன்று.

யாழ்ப்பாண நகரில் சில இடங்களில் மதகுகள் உடைபட்டுப்போயிருக்கின்றன. மழை பெய்துகொண்டிருக்கும்வேளையில் சறுக்கி விழுவது ஒரு சர்வ சாதாரணம். எனவே இந்த மதகுகள் இவ்விதம் சீர்கேடடைந்திருந்தால் போக்குவரத்துச்செய்யும்வாகனங்கள்கூட சறுக்கி உடைபட்டிருக்கும். மதகுகளூடாக சால்வாய் வழியே விழவேண்டியிருக்கும். பாதசாரிகளுக்கு இதனால் நேரக்கூடிய அபாயம்சொல்லித்தெரியவேண்டியதில்லை. எனவே இதுசம்பந்தமாக விரைவானசீர்திருத்த வேலைகள்மேற்கொள்ளப்பட்டால் நல்லதாக இருக்கும்.

ஃ ஃ ஃ

'நெடுந்தீவுப் பிரயாணிகள் அனுபவிக்கும் கஷ்டங்கள் கூறப்புகுந்தால் கடலைப் பரந்து விரியும்,என நெடுந்தீவுப்பகுதியைச் சேர்ந்த ஒரு நண்பர் தெரிவித்துள்ளார். இந்தக் கஷ்டங்கள் இயற்கையினால் ஏற்படாது செயற்கையினால் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மோட்டார்ப்பகுதிச்சேவை — பஸ் இணைப்புச் சேவை ஆகியவைபற்றியே அவர் குறிப்பிட்டுள்ளார். நெடுந்தீவுப் பிரயாணிகள்கஷ்டம்நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இதைஇப்படியே இருக்கவிடுவது சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல பெயரை வாங்கித்தராது.

—குருவி

## நாட்டிலும் நகரிலும்

ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன் அதைப்பற்றி சிந்திப்பதுதான்புத்திசாலித்தனமான செயல். ஆனால் சிலர் காரியத்தைச் செய்த பிறகுதான் தாம்செய்ததோ அல்லது சொன்னதோ சரியோபிழையோஎன யோசிப்பார்கள். இதைத்தான் நமது என்றும் அழியாத் திருவள்ளுவம் அழகாக எடுத்துக் கூறுகிறது. 'யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்று.

பெரிய பதவிகளில் இருப்பவர்கள், முக்கியமாக நாட்டின் தலைவர்களான அரசியலாளர், தாங்கள் சொல்வது ஒவ்வொன்றையும் அளந்து, சீர்தூக்கிப் பார்த்து நறுக்காகப் பேசிக்கொண்டால் அவர்கள் எத்தனையோ இக்கட்டான சம்பவங்களிலிருந்து தப்பிவிடலாம். இதை விட்டுவிட்டு பொதுமக்கள் காட்டும் ஆரவார மகிழ்ச்சியில்சொக்கிப்போய் சொல்வது இன்னது; சொல்லாதது இன்னது என்று இனம் தெரியாமல் சிலர் உணர்ச்சி வேகத்தில் எதையேனும் உளறிக் கொட்டுவது நம் நாட்டில் சர்வ சாதாரணமாகி விட்டது.

சில நாட்களுக்கு முன்பு நமது உள்நாட்டு மந்திரி திஹநாயக்கா கிழக்கு மாகாணத்துக்குப் போயிருந்தார். அங்கே காத்தான்குடியில் முஸ்லிம் பெண்மணிகள் நெசவுசெய்யும் சேலைகளைப் பார்த்துவிட்டு மெய்மறந்து பரவசரானார். 'ஆஹா, இம்மாதிரி அழகான சேலைகளை நான் எங்குமே கண்டதில்லை. இந்தியச் சேலைகள் இவற்றிற்கு எம்மாத்திரம்? இலங்கையில் நெசவாகும் சேலைகளே முழு உலகத்திலும் மிகவும் அழகானவை. காத்தான்குடிச் சேலைகளை உடனடியாக லண்டனுக்கும், நியுயோர்க்குக்கும் ஏற்றுமதிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் போகிறேன்' என்று இவ்வாறெல்லாம் அளந்துகொட்டியிருக்கிறார்.

பேஷ், பேஷ், டாக்டர்! பரம நைஷ்டிக பிரமசாரியான தங்களுக்குச் சேலைகளின் லட்சணங்களை ரஸிக்கும் திறமை எப்படிக் கிடைத்ததென்பது ஒருபுறமிருக்க கொழும்பு திரும்பியதும் காத்தான்குடி சேலைகளை லண்டனுக்கு ஏற்றுமதி செய்ய ஆவனசெய்யும் பார்க்கலாம் சந்தர்ப்பத்தை பொறுத்து ஏதோ சொல்லிவிட்டோமென்று தட்டிக்கழிக்காமல் நடைமுறையில் செய்துகாட்டும்படி தங்களை மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். சில வருடங்களுக்கு முன்பு 'ஒவ்வொரு கமக்காரன் மகனின் கையிலும் ஒரு கைக்கடிகாரம் ஜொலிக்கும்படி செய்வேன்' என்ற காத்தான்குடிப் பக்கத்துப் பிரமுகர் ஜம்பம் பேசியது போலத் தாங்கள் பேச்சும் நின்றுவிடப்படாது!

ஃ ஃ ஃ

'ரயில்வேக் கடவைகளை இனிமேல் ரயில்வே இலாகா போடமாட்டாது. வேண்டுமானால் சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் சிரமதானம் மூலம் கடவைகளைப் போடலாம்' என்று ரயில்வேப் பகுதித் தலைவர் திரு. ரம்பாலா ஒரு கூட்டத்தில் நா காக்காமல் பேசிவிட்டார். இதைக் கேள்விப்பட்டதும், தபால் பகுதித் தலைவர் 'இனிமேல் நாங்கள் தபால் விநியோகம்செய்ய மாட்டோம். வேண்டுமானால் விரும்பினோர் தபாற் கந்தோர்களுக்கு வந்து கடிதங்களை எடுத்துச் செல்லலாம்' என்று கூறலாமல்லவா? அதுபோலப் 'பஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் பரிதாப சம்பவம்

# பொய் வதந்தி கேட்டு தாய் மரணம்

## தடுப்பு முகாமிலிருந்து ஓடோடி வந்தும் தாயின் சடலத்தை மகன் காணவில்லை

கிளிநொச்சி, வெள்ளி

தனது அருமை மகனை இந்தியாவுக்கு நாடுகடத்திவிட்டார்கள் என்ற பொய்வதந்தியைக்கேட்டு அதிர்ச்சியடைந்து ஒரு பெண் மரணமான சம்பவம் கிளிநொச்சியிலுள்ள 5-ம் வாய்க்காலில் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

"மல்லியா சின்னம்மா (65 வயது) என்பவரின் ஒரே ஒரு மகனான மல்லியா துரைச்சாமி என்பவர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கொழும்பு தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தார். இவர் தடுப்பு முகாமில் இருக்கையில் சிலர் காலம் சென்றவரிடம் சென்று 'உனது மகனை இந்தியாவுக்கு நாடுகடத்திவிட்டார்கள்' என்று கூறியதாகவும் இதைக்கேட்ட மாத்திரத்தே காலம் சென்றவர் அதிர்ச்சிவசப்பட்டு உயிர் நீத்தார் என்றும் சொல்லப்படுகிறது.

இச்செய்தி தடுப்பு முகாமிலுள்ள துரைச்சாமிக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் மேற்படி நபரை உடனடியாக தாயாரின் சமக்கிரியைக்கு பங்குபற்ற விடுதலை செய்யுமாறு அனுமதி கோரி பிரதம மந்திரிக்கும் ராஜாங்க அமைச்சருக்கும் தந்திமூலம் தெரிவித்தாரெனவும் இந்தத் தகவலை ஏற்று மேற்படி நபர் விடுதலை செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாய் இறந்த செய்திகேட்டுச் சோகத்தால் மூழ்கியிருந்த மகன் கிளிநொச்சி வந்துசேரமுன்னரே தாயாரின் உடல் மயானத்தில் எரிக்கப்பட்டு விட்டது. தாயின் உடலைக் கண்ணில் கண்டுகழிக்க ஓடோடி வந்த தனயன் தாய் எரிந்த சாம்பலைத்தான் காண நேர்ந்தது.

## "சிங்கள ஆசிரியர்களை தமிழர்கள் இன்னல் செய்கின்றனர்'

### சிங்கள பத்திரிகையின் விஷமத்தனம்

கொழும்பு, வெள்ளி

'ஜனதின' என்ற சிங்கள தினசரி சிங்கள ஆசிரியர்கள் பற்றி பின்வரும் அலைப்புச் செய்தியை வெளியிட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் வடக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்ட சிங்கள ஆசிரியர்களை துன்பப்படுத்தி அங்கிருந்து அவர்களை திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆசிரியர்களுக்கு இடவசதியளிக்கும் பொது மக்களையும் இவர்கள் பயமுறுத்துவதினால் சிங்கள ஆசிரியர்கள் தங்குவதற்கே இடமில்லாது கஷ்டப்படுகின்றனர்.

குறிப்பு:

இதுபோன்ற சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதாக எமக்கு எதுவித தகவலும் கிடைக்கவில்லை. (ஆ—ர்)

## 'பெண்ணின் உடம்பில் 9 காயங்கள் இருந்தன'

### தாக்கிய வழக்கில் டாக்டர் சாட்சியம்

மாவிட்டபுரம், வெள்ளி

ஆசிரியர் ஒருவரின் மனைவிக்கு ஆசிரியரின் தம்பியும் ஆசிரியருமான ஒருவர் பொல்லால் அடித்துக் காயம் விளைவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வட்டுக்கோட்டை கிழக்கைச்சேர்ந்த கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை (ஆசிரியர்) நடராசா சோதிநாதன், செல்லத்துரை ஆறுமுகநாதர் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கிருஷ்ணர் வைரமுத்துவின் (ஆசிரியர்) மனைவி சிவபாக்கியத்தைப் பொல்லால் அடித்துக் கடுங்காயம் விளைவித்ததாகவும், வைரமுத்துவுக்குச் சிறுகாயம் விளைவித்ததாகவும், மூன்று எதிரிகளும் சேர்ந்து வைரமுத்து சமாநாதனுக்குச் சிறுகாயம் உண்டாக்கியதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சிவபாக்கியத்தை 17ம் திகதி பரிசோதித்துப்பார்த்தேன். அவரின் உடம்பில் ஒன்பது அடிகாயங்கள் காணப்பட்டன. இடது கைசிறுவிரலில் ஒருகாயம் வீக்கமாக இருந்தது. அவ்வீக்கம் முறிவால் ஏற்பட்டிருக்கலாமெனச் சந்தேகித்தேன். 19-ம்திகதி சிவபாக்கியம் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேசெல்ல அனுமதிக்கப்பட்டார். 22-ம் திகதி மீண்டும் அனுமதிக்கப்பட்டார். 28-ம் திகதி 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்தபோது கைவிரல் மொழியில் முறிவு இருப்பது தெரிந்தது."

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் சாட்சியைக்குறுக்கு விசாரணை செய்தார். 17-ம்திகதி இருந்த சின்னிவிரல் காயம் சம்பந்தமாகச் சந்தேகம் எழுந்திருந்தால் உண்மையில் ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கலாமல்லவா என்று வழக்கறிஞர்கேட்ட போது சாட்சி அதனை ஒப்புக்கொண்டார். காயம் அடைந்தவரின் முறிவு காயம் 19-ம் திகதி விடுதலை ஆகி 22-ம் திகதி மீண்டும் அனுமதிக்கப்பட்ட இடைவேளையில் ஏற்பட்டிருக்கலாமல்லவா என்ற கேள்விக்கும் டாக்டர் 'ஆம்' என்று பதிலளித்தார்.

கையைவீசும்போது ஏதேனும் கடினமான பொருளில் கைதட்டப்பட்டு அக்காயம் ஏற்பட்டிருக்குமா என்ற வழக்கறிஞரின் கேள்விக்கும் டாக்டர் 'ஆம்' என்று பதிலளித்தார்.

டாக்டரின் சாட்சியத்தைத் தொடர்ந்து நீதிபதி வழக்கை மேல் விசாரணைக்காக ஒத்திவைத்தார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். சங்கானைப்பொலிசாரின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. சி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடனும் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினார்.

## புதிய ஜே. பி. க்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் சமாதான நீதியரசராக நியமனம் பெற்ற கோண்டாவில்பகுதி கிராமசபை உறுப்பினரான திரு. சி. இரத்தினசிங்கத்தைக் கௌரவித்து ஓர் தேநீர் விருந்து கொக்குவில் கிராமசபைத் தலைவர் திரு. சி. அருளம்பலம் ஜே. பி. தலைமையில் கொக்குவில் கிராமசபை மண்டபத்தில் அளிக்கப்பட்டது. அவ்வைபவத்தின்போது திரு. சி. இரத்தினசிங்கத்தின் அரிய சேவைகளைப் பாராட்டித் தலைவர் பேசினார். கோண்டாவில் பகுதிக் கிராம சேவையாளராகிய திரு. க. செல்வரத்தினமும் மற்றும் சிலரும் பேசினார்கள். கிராம சபை உறுப்பினராகிய திரு. க. சண்முகநாதன் நன்றி கூறினார்.

## 'தாய்மொழியே போதனாமொழி'

யாழ்ப்பாணம், சனி

'பாடசாலைப் பிள்ளைகளின் போதனாமொழி தாய்மொழியாகத் தானிருக்கவேண்டும்'

இலங்கை தமிழரசுக்கட்சி கந்தர்மடக்கிளை மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இக்கூட்டத்தில் மற்றும் பல முக்கிய விஷயங்கள் பற்றி ஆராயப்பட்டதாக அறியப்படுகிறது.

## பாணில் புழு

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்புப்பகுதியில் விற்கப்படும் பாண், பணிஸில் புழுக்களும் வண்டுகளும் காணப்படுகின்றன.

இதையிட்டு மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

## 'வங்குகளவால் மக்கள் அவதி

கரையாயன்குளம், வெள்ளி

"கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக எமது ஊராகிய பாஷையூரில் சிறுகுவலைத்திருட்டு நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இதைத் தடுப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் பயனற்றதாகி விடுகின்றது. ஊர்க்காவலர்களாகிய பொலிசார் எவ்வளவோ முயற்சி எடுத்தும் இதைக் தடுக்கமுடியாமலிருக்கிறது. இக்களவு மெலிமேலும்பெருகுமேயானால் எமது மக்கள் பெரிதும் கஷ்டமடைய வேண்டியிருக்கும்." இவ்வாறு பாஷையூர் விஜயாகம்பைன்ஸ் இளைஞர்மன்றத்தின் பொதுக் கூட்டத்தில் போது திரு. பி. அன்ரனிப்பிள்ளை கூறினார். இக்களவைத் தடுப்பதற்கு ஏற்றநடவடிக்கை எடுக்குமாறு கைத்தொழில் மீன் பிடி மந்திரிக்கு உடுப்பிட்டி எம். பி. மூலமாக ஒரு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது

## எட்மண்ட் சமரக்கொடி வடபகுதி விஜயம்

சுழிபுரம், வெள்ளி

புரட்சிவாத சமசமாஜக் கட்சி பொதுச் செயலாளரும் முன்னாள் புலத் சிங்கள தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எட்மண்ட் சமரக்கொடி இம்மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் வடபகுதிக்கு விஜயம்செய்யவிருக்கின்றார்.

இவர் தனது விஜயத்தின்போது 12-ம் திகதி மாலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெறும் பகிரங்கக் கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார். 13-ம் திகதி காலை கட்சிக் கிளைக்கூட்டத்திலும் மற்றும் சில வாலிப சங்கக் கூட்டங்களிலும் கலந்துகொள்வார். அன்று மாலை வழக்கம்பரை சனசமூக முன்றலில் 'இலங்கை அரசியலில் தமிழரின் இன்றைய நிலை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

## நியமனம்

காரைநகர்/ஊர்காவற்றுறை, வெள்ளி

நாரந்தனையைச் சேர்ந்த ஜனேந்திரன் ஆபிரிக்காவில் உள்ளசேராலோன் என்னும் நாட்டில் விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

தாளையடி இராணுவ வழக்கில்

## எதிரிகள் நால்வரும் விடுதலை

### இனிமேலாவது புனிதமாகவும் நேர்மையுடனும் நடவுங்கள்

#### நீதிபதி எச்சரிக்கை

சாவகச்சேரி, வெள்ளி

தாளையடி இராணுவத் தாக்குதல் வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எதிரிகள் நால்வரையும்விடுதலைசெய்து தீர்ப்பளித்தார். இவ்வழக்கு இன்று காலை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. வி. எம். குமாரசுவாமி முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு யூலை மாதம் 5-ம் திகதிதாளையடியில் டபிள்யூ. என். கருணாரட்ண, வே. எம். பசநாயக்கா, எஸ். ஏ. டீ. சில்வா, ரீ. எவ். சீடின் ஆகிய நாலு இராணுவ வீரரும் ம. பெனடிக், அ. செபமாலை, என். மோசஸ், எஸ். ஏ. செபமாலை, அ. பத்திநாதர் ஆகிய ஐவருக்கும் அடித்துக் காயம் விளைவித்ததாகவும், வீட்டுக்குத்தீமூட்டி ஐயாயிரம் ரூபா உடைமைக்குச் சேதம் விளைவித்ததாகவும், சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கைப்பார்ப்பதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பெண்கள் உட்படப் பெருந்தொகையானோர் திரண்டிருந்தனர்.

எதிரிகள் நால்வரும் வெள்ளை லோங்ஸும் வெள்ளைச்சேட்டும் அணிந்து கறுத்தரையும் கட்டியிருந்தனர்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் சி. பாலகிருஷ்ணனின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளிகளாக முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சில்வா வழக்கை நடத்தினார்.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. பி. ஆர். சில்வா, இராணுவ மேலதிகாரி திரு. எச். டபிள்யூ. அத்துகோறளை ஆகியோரும் சாட்சியமளித்ததின்மேல் எதிரிகளின் அட்வகேட் தமது உரையை நிகழ்த்தினர்.

முடிவில் நீதிபதி தமது தொகுப்புரையின்போது இராணுவவீரர் நால்வரையும் பார்த்துக்கூறியதாவது:

நீங்கள் செய்த குற்றத்தில் தடையில்லை; அநாகரிகமான முறையில் விசாரிபோல் நடந்திருக்கிறீர்கள். உங்களைப் போன்ற பெரும் பதவிகளில் இருப்போர் இப்படியான முறையில் நடந்தால் சமாதானத்தை நிலை நாட்ட முடியாது. ஆனால் உங்களுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்கப் போதியசாட்சிகள் இல்லாமையால் உங்கள் நால்வரையும் விடுதலை செய்கிறேன்.

இனிமேலாவது உங்கள் [illegible] புனிதமான முறையில் நேர்மையுடன் நடத்துங்கள்.

## "முன்னவர் வழியில் நாடகக்கலை முன்னேறவேண்டும்'

### கலைவிழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

"முத்தமிழில் ஒன்றான நாடகம் இன்று நேற்றல்ல பண்டைக்காலந்தொடக்கம் வளம்பெற்ற கலையாக வளர்ந்து வந்திருக்கிறது. அதன் சிறப்பை சிலப்பதிகாரம் போன்ற உயரிய இலக்கியங்களில் காண்கிறோம். காலத்தால் தொடமுடியாத தமிழ்மொழியின் கலைகளில் உயரிய இடத்தைப்பெற்று விளங்கும் இக்கலையைப் பேணிச் சீர்படச்செய்ய வேண்டியது நம்மவர்கடனாகும்."

இவ்வாறு பண்டிதர் ஆசிநாதன் அண்மையில் உரும்பராயில் பரிசுத்த மைக்கேல் ஆலய முன்றலில் நடைபெற்ற கலைவிழாவிற்பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு: நாடகக் கலை சமீப காலத்தில் ஈழத்தில் வெகு தீவிரமாக முன்னேறிவருவதைக் காணும்போது உளம் மகிழ்வுறுகின்றது ஆயினும் நம் முன்னவர்களின் தூய்மையான நோக்கங்களுக்குக் குந்தகம் விளையா வகையில் மென்மேலும் வளர்ச்சியுற வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்."

இக்கலை விழாவுக்கு வண. பிதா சவிரிமுத்து தலைமை தாங்கினார்.

சண்டிக்குழி கெல்சி அறிவு மன்றத்தினரின் 'ஒளி பிறந்தது', பாஷையூர் நாடக மன்றத்தின் 'கண்டி அரசன்', குருநகர் நாடக மன்றத்தின் 'குமணன்' ஆகிய நாடகங்கள் இவ்விழாவில் இடம்பெற்றன.

திருவாளர்கள்: நா. ஞானப்பிரகாசம், சபாநாயகம் ஆகியோர்களும் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. பொது சபையின் மனித உரிமை பிரகடனம்

ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் மனித உரிமைகள் சாஸனத்தைப் பற்றி மேடைகளில் பேசப்படுவதை நம்மில் அநேகர் கேட்டிருப்பர். ஆனால் அதன் வாசகத்தை பொதுவாக அநேகர் அறிந்திருப்பதில்லை. ஐ. நா. பொதுச்சபையின் மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தின் 30 பிரிவுகளில் 15 இவ்வாரம் இங்கு தரப்படுகின்றன. மிகுதி அடுத்த வாரம் எதிர்பார்க்கவும்.

## பிரிவு: 1

சகல மனிதர்களும் சுதந்திர புருஷர்களாகச் சமமான அந்தஸ்து உரிமைகளுடன் பிறக்கின்றனர். பகுத்தறிவும் மனச்சான்றும் இயல்பாகவே அவர்களுக்கு அமைந்திருக்கிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதர பாசத்துடன் பழகவேண்டியவர்களாவர்.

தகுதி

## பிரிவு 2

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு கொள்கை, தேசிய அல்லது வேறு சமூக வம்சாவளி, சொத்து, பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற எந்தவித வேறுபாடுமின்றி; இந்தப் பிரகடனத்தில் கண்டுள்ள எல்லா உரிமைகளையும் அனுபவிக்க ஒவ்வொருவரும் தகுதியுடையவராவார்.

மேலும் ஒரு நாடு, அல்லது மண்டலம் சுதந்திரம்பெற்றதாய், தர்மகர்த்தா ஆட்சிக்குட்பட்டதாய், சுயாட்சியற்றதாய் அல்லது ஆதிபத்திய உரிமை வேறெந்த முறையிலாவது வரையறுக்கப்பட்டதாய் இருந்தபோதிலும் அந்நாட்டைச் சேர்ந்த ஒருவனுக்கு, அதன் அரசியல், நீதிபரிபாலன அல்லது சர்வதேச அந்தஸ்தின் அடிப்படையில் வேறுபாடு காட்டப்படமாட்டாது.

வாழ்க்கை

## பிரிவு: 3

வாழ்க்கை, சுதந்திரம், உடல் பாதுகாப்பு சம்பந்தமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

நீதிமன்ற விசாரணை

## பிரிவு: 10

ஒருவரின் உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும், அவருக்கு விரோதமான குற்றச்சாட்டுகள் பற்றியும் தீர்மானிப்பதில் சுதந்திர, பாரபட்சமற்ற ஒரு நீதிமன்றத்தின் பூரண சமத்துவமுள்ள நியாயபூர்வமான, பகிரங்க விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவார்.

நிரபராதி

## பிரிவு: 11

(1) தண்டனைக்குரிய குற்றச்சாட்டுக்குள்ளாகும் ஒவ்வொருவரும் தனது நலன்களை காத்துக்கொள்ள அவசியமான சகல உத்தரவாதங்களும் உடையதான ஒரு பகிரங்க விசாரணையில் சட்டப்படி குற்றவாளியென நிரூபிக்கப்படும்வரை நிரபராதியெனக் கருதப்படுவதற்கு உரிமையுடையவராவார்.

(2) ஒரு காரியம் அல்லது தவறு நிகழும் சமயத்தில் அது தேசிய அல்லது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாக இல்லாதிருக்கும்பட்சத்தில், எவரும் தண்டனைக்குரிய குற்றம் புரிந்ததாகக் கருதப்படமாட்டார்.

குற்றம் புரிந்த சமயத்தில் விதிக்கப்படக் கூடியதாக இருந்த தண்டனையைத் தவிரப் பெரிய தண்டனை எதுவும் விதிக்கப்படவும் மாட்டாது.

அந்தரங்கம்

## பிரிவு: 12

ஒருவருடைய அந்தரங்கம், குடும்பம், வீடு அல்லது கடிதத்தொடர்புகளில் கண்மூடித்தனமாகத் தலையிடுதல், அவருடைய கௌரவத்தையும் புகழையும் இழிவுபடுத்தல் போன்றவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படமாட்டார். அப்படியான தலையீடு, இழிவுபடுத்தலுக்கு எதிரான சட்டப் பாதுகாப்புக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவார்.

## பிரிவு: 13

(1) ஒவ்வொரு ராஜ்யத்தினதும், எல்லைகளுக்குள் நடமாடுவதற்கும் குடியிருப்பதற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவார்.

(2) தம் சொந்த நாடு உட்பட எந்த நாட்டையும் விட்டுச் செல்வதற்கும், தம் நாட்டுக்குத் திரும்பிவருவதற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவார்.

## பிரிவு: 14

(1) கொடுமைகளுக்கு அஞ்சி, வெளிநாடுகளில் புகலிடம் தேடவும், அனுபவிக்கவும் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவார்.

(2) [illegible] நங்களினுல் அல்லது ஐக்கிய நாடுகளின் நோக்கங்கள், கொள்கைகளுக்கு மாறான செயல்களினால் ஏற்படும் வழக்குகள் விஷயத்தில் இவ்வுரிமை செயல்படாது.

சொந்த தேசம்

## பிரிவு: 15

(1) ஒரு தேசத்தை சேர்ந்தவராயிருப்பதற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவார்.

(2) ஒருவருடைய தேசியம், கண்மூடித்தனமாகப் பறிக்கப்படவோ, அதை மாற்றிக்கொள்ளும் உரிமை மறுக்கப்படவோ மாட்டாது.

மிகுதி அடுத்த வாரம்

# சமூக முன்னேற்றத்துக்கு ஒரு தடைக்கல்!

—செல்வி நந்தனி சிவதாசன்—

ஆதிகாலத்தில் மக்களனைவரும் தாம் செய்யும் தொழில்களைக் கொண்டே பல்வேறு சாதியினராகப் பிரிக்கப்பட்டனர். ஆனால் அதே முறையை இன்றைய நாகரீக உலகிலும் மக்கள் கைக்கொள்கின்றனர். ஜப்பான் போன்ற நாடுகளில் எல்லோரும் ஒற்றுமையாக மீன்பிடித்தொழிலை ஆதரிப்பதால்தான் இன்று உலகிலே மீன்பிடித் தொழிலில் சிறந்த நாடாக ஜப்பான் விளங்குகிறது. இதே போலத்தான் நாமெல்லோரும் ஒன்றுபட்டால் நிச்சயமாக நம் நாடு முன்னேறும் என நாம் எதிர்பார்க்கலாம்.

மக்கள் வீட்டுக்குள்ளே ஆசாரம் என்ற பெயரில் அறியாமையால் ஓர் சுவர் கட்டி அவன் வேறு சாதி, நான் வேறு சாதி,... ஒன்று பல சாதிகளை உண்டாக்கினர். இது சுத்த பேதமை என்பது சிந்திக்கத் தெரிந்த எவரும் மறுக்க முடியாததோர் உண்மை.

### வாக்கை மதிக்கவில்லை

'சாதிக் கொடுமையை விலக்குவது எமது கடமை' என்று இடித்து முழங்கிய பாரதியாரை, 'தீண்டாமை' அவள் என்று தீரத்துடன் பாடிய தீந்தமிழ் மகனை வாழ்த்தி வணங்கிப் போற்றி ஏற்றும் நம் சமூகம் ஏன் அவர்கள் வாக்கிற்கு மதிப்புக் கொடுக்கவில்லை? மகாத்மாவின் மாண்பைப் போற்றும் மக்கள் ஏன் அவரைச் செயலில் பின்பற்றவில்லை?

கடவுள் நம்மிடம் என்ன வேற்றுமையை வைத்துள்ளார்? எல்லோரும் மானிட சாதி. எல்லோரும் உலக மாதாவின் குழந்தைகள். இதில் ஆண், பெண், கொடுப்போர், கொடாதோர் எனப் பிரிக்கலாமே ஒழிய வேறு எப்படிப் பிரிக்க முடியும்.

### பேச்சளவில்

சிலர் "நான் சாதிப்பாகுபாட்டைஎதிர்க்கிறேன் இது விரைவில் ஒழிந்து மக்கள்யாவரும் புனர் ஜன்மம் எடுக்க வேண்டும்", என்றெல்லாம் வாய்ப்பேச்சால் மிகப் பெரிதாகப் பேசி வெளுத்துக் கட்டி விடுவார்கள். ஆனால் அடுத்ததாகத் தம் மகளுக்கோ, மகனுக்கோ பெண்ணோ, பிள்ளையோ எடுக்கும்போதுதான் அவர்களைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த நடிப்புச் சுதேசிகளின் சுயரூபம் வெளியாகும். அந்த நேரத்தில்தான் அவர்கள் தம் மேடைப்பேச்சையெல்லாம் மறந்து காற்றிலே விட்டுவிட்டு மும்முரமாகச் சாதியைப் பற்றிஆராய்வார்கள்.

சிலர் சிலரது வீட்டில் உணவோ பானமோ உட்கொள்ளார். காரணம் சாதி வேற்றுமையே. ஆனால் வீட்டில் சாப்பிடுவது, குறைந்த சாதி என அவர்கள் கூறும் சாதியிலிருக்கும் வேலைக்காரன் சமைத்த உணவாகத்தான் இருக்கும். தாக சாந்திக்காகத் தேநீர்க்கடையில் தேநீர் உட்கொள்வர். அப்பொழுது தேநீர் தயாரித்தவன் சாதியைப் பார்க்காத தயாள குணம் அவர்களுக்கு இருக்கும்!

### தடைக்கல்

நம் சமுதாய முன்னேற்றத்திற்கு சமூகக் கட்டுப்பாடு ஒரு தடைக்கல்லாகும். சமயத்தின்பெயரால் அன்று மக்கள் சாதி வித்தியாசம் பாராட்டினர் ஆனால் அன்றே! எழுந்த கண்டனக் குரல்களால் அவை அடங்கிவிட்டன. சாதி வித்தியாசம் பாராட்டுவது சமயத்தில் உள்ள குற்றமல்ல. அது அதை அனுஷ்டிப்போர் மீதுள்ள குற்றமேயாம். சட்டத்தாலோ, சமயத்தாலோ, கட்சிப் பிரசாரத்தாலோ மாற்ற முடியாத பரம்பரை பரம்பரையாக இரத்தத்துடன் ஊறிவிட்ட விஷயமாக உள்ளது. இக் கொடுமை. கோவில்களுக்குள் கூட முன்பு சிலரைச் செல்ல விடவில்லை. ஆனால் இன்று சில இடங்களிலே புகவிட்டாலும் அதிகமான இடங்களில் ஹரிஜன மக்களைப் புகவிடவில்லை.

இன விடுதலையை நாடும் நம் தமிழ் சமூகம் தனக்குள் வேயே சாதிப்பாகுபாட்டை வைத்துக் கொண்டு தன்சமூகத்தின் ஒர் பகுதியையே அடிமைப்படுத்திக்கொண்டு எப்படித் தன் உரிமைக்காகப் போராடலாம்? அவர்கள் எந்த உரிமையில் சொந்த உரிமைக்காகப் போராடலாம்? எனவே சொந்த உரிமையைப் பெறமுன் தம்மிடையே உள்ள சாதிவேற்றுமையை இன்றே அழிக்கவேண்டும். அன்றேல் சொந்தஉரிமையைப் பெறக் கனவும் காணக் கூடாது. ஜனநாயக நாட்டிலே ஜனநாயக ஆட்சியிலே வாழும் ஜனநாயக மக்கள்ஜனநாயக தர்மத்தைப் பேணாது பேண மறுத்து எப்படித் தன் உரிமைக்காக ஜனநாயக வாழ்விற்காகப் போராடுவர்? எனவே எதிர்காலத்திலாவது "எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்ற கொள்கையைக் கைக்கொண்டு வாழ்வோமாக.

ஒழிக சாதி வேற்றுமை
ஒன்றுபடுக தமிழரே.

# பொன் வயல்

## காலநிலை எப்படி?

வானத்தில் இரண்டு தீவட்டிகள் தெரிந்தன. மத்துகம பகுதியிலிருந்து பார்த்தபோது அந்தத் தீப்பந்தங்கள் கொழும்புத் திசையில் காணப்பட்டன. கிராமவாசிகளும் தோட்டத்தொழிலாளர்களும் அதிசயமாக அவைகளைப்பார்த்தனர். 'கொள்ளிவாய்ப் பிசாசுகள்' நடமாடுவதாக சிலர் பேசிக்கொண்டார்கள். வேறுசிலர் 'ரஷ்ய ராக்கட்' என்று கூறிக்கொண்டார்கள். விஷயம் தெரிந்த ஒருவர் மட்டும் வானிலை ஆராய்ச்சி நடைபெறுகிறது என்று விளக்கம் கூறினார். கொழும்பில் வானிலை ஆராய்ச்சியாளர்கள் ஒளிக்கதிர்களைப் பயன்படுத்தி வானமண்டலத்தை ஆராய்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார்.

வானிலை ஆராய்ச்சி என்றதும் என்னவோ போலிருந்தது. இலங்கையிலுள்ள வானிலை அவதானநிலையம் காலநிலைபற்றி அடிக்கடி அறிவிக்கின்றது. அந்த அறிவிப்புகள் பொதுவாக சரியாகவிருந்தாலும் பலர் திருப்தியாய் இருப்பதாகக் கூறக்காணோம். 'அவதான நிலையமா, அவமான நிலையமா' என்று சிலர் கிண்டல் செய்கிறார்கள். அவதான நிலையம் இன்னும் திறமையாக செயல்படுமானால் நாட்டில் ஏற்படும் புயல் சேதம், வெள்ள அபாயம் போன்றவைகுறித்து பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்கவழி செய்ய முடியும். இப்போதெல்லாம் எப்போது மழைவரும், எப்போது வெள்ளம் பெருகும் என்பது குறித்து சரியான ஹேஷ்யம் கிடைப்பதாக இல்லை. அதனால் திடீரென ஏற்படும் மழை, புயல், வெள்ளம் போன்ற அபாயங்களினால் பலர் பலியாக நேர்கின்றது. பயிர்பச்சைகளும் வீடு வாசல்களும் நாசமாகின்றன.

மதராஸ் திருச்சிவானொலி நிலையங்கள் ஒலிபரப்பு செய்யும் கால நிலை அறிவிப்புகள் பெரிதும் சரியாக இருப்பதாகவும், அந்த அறிவிப்புகள் பொதுவாக வடக்கு மாகாணத்துக்கு உபயோகமாக இருப்பதாகவும் சிலர் கூறுகிறார்கள்.

எது எப்படியாயினும் இலங்கையின் அவதான நிலையம் இன்னும் சிறப்பாக செயல்படவேண்டியது அவசியம். அதற்கான கருவிகளைப்பெற்றுத் தருவதும், சிறந்த நிபுணர்களை அமர்த்துவதும் அரசாங்கத்தின் கடமை.

—பேனு

## சுவரில் தொங்கிய பெண்கள்

படுக்கை அறையில் திடுமென நுழைந்த அந்தவெளிநாட்டு நிபுணர் சுவர்களில் தொங்கிக்கொண்டிருந்த பெண்களின் உருவப் படங்களை சற்றுநேரம் கூர்மையாக அவதானித்தார். பின்னர் இந்தப்படங்களில்இருப்பவர்கள் எல்லாம் யார் என்று வினவினார்.

இவையெல்லாம் வெளிநாட்டு, அதாவது இந்திய சினிமா நடிகைகளின் படங்கள், இந்த அறையில்தங்கியிருக்கும் நண்பர் அந்த நடிகைகளின் 'பிரியர்' என்றேன் நான்.

"அடடா, உங்கள் நாட்டில்இயற்கைஅழகு பொருந்திய எத்தனையோ பெண்கள் இருக்கிறார்களே! அவர்களின் படங்களை இப்படி ஒட்டிவைத்து அழகு பார்க்கலாமே, என்று கவலைப்பட்டார் அந்த தொழிலாளர் கல்வி நிபுணர் திரு, மொரின் வெளிப்பாட்டில் அதுவும் போலி அழகில் மயங்கிக் கிடக்கும் நம் வாலிபர்கள் பற்றி நான் அங்கலாய்த்துக் கொண்டேன்.

—பேனு

## மகிழ்ச்சியாக இருப்பவர்கள்

எதையாவது உருவாக்குவதில் ஈடுபட்டிருப்பவர்கள் மகிழ்ச்சியாகவே இருக்கின்றனர். மிதமிஞ்சித் தின்றுவிட்டு ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பவர்கள்தான் உற்சாகமற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

— டின் - இங்கி

## ஜப்பானில் தீ மிதிப்பு

'தீமிதிக்கும்' சமயச்சடங்குகள் இந்துக்கள் மத்தியில் மாத்திரமே பரவி இருப்பதாக நம்மில் அனேகர் எண்ணிக்கொண்டிருக்கிறோம். இலங்கை, இந்திய நாடுகளில் மட்டுமின்றி வேறு பல நாடுகளிலும் இந்தச்சடங்கு கைக்கொள்ளப்பட்டே வருகின்றது.

மழை இல்லாமல் பூமி வரட்சியால் வரண்டுபோகும் காலங்களில் இந்தியாவிலும் இலங்கையில் சில பகுதிகளிலும் கொடும்பாவி எரிப்பது வழக்கத்தில் இருக்கிறது. சிங்களவர்கள் ஒருவித விளையாட்டத்தை நடத்தி தெய்வங்களின் கருணையை வேண்டும் பழக்கத்தை உடையவர்களாய் இருக்கின்றார்கள்.

ஜப்பானில் வேளாண்மை சிறப்படைய வேண்டுமென்பதற்காக 'ஹிவதாரி' என்ற தீமிதிக்கும் சடங்கை நடத்துகிறார்கள். இந்தச்சடங்கின் மூலம் பயிர்கள்செழிப்புற்று அறுவடை பெருகும் என்று கிராமவாசிகள் நம்புகின்றார்கள். இந்தச்சடங்கு சுமார் இரண்டு நூற்றாண்டுக்குமுன்தான் ஜப்பானில் பரவியது.

நெருப்பு மனிதனின் உடலில் உள்ள தீயசக்திகளையெல்லாம் எரித்து விடுவதாக அவர்கள் நம்புகின்றனர். அதனால், வயது முதிர்ந்தவர், இளைஞர்கள், குழந்தைகள் என்றும் வேறுபாடின்றி எல்லோரும் இதில் கலந்து கொள்கின்றனர். முதலில் நெருப்புக்குழியை சுற்றி நடமாடுகின்றனர். பின்னர் எரியும் நெருப்பில் வெறுங்காலுடன் நடந்து செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிடம் உடுப்பிட்டி அ.மிஷன் தோல்வி

யாழ்ப்பாணம், சனி

யாழ் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 1-ம் பிரிவு உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் பலமாக மோதிக்கொண்டன.

ஆரம்பத்திலிருந்து இடைவேளைவரையும் போட்டியில் சளைப்புக் காணப்பட்டபோதும் இருசாராரும் மாறிமாறி கோல்கள் போட்டுக்கொண்டேயிருந்தார்கள். இடைவேளையின்போது உடுப்பிட்டிக் கோஷ்டி 3 கோல்கள் பெற்றிருக்கத் தக்கதாக சாவகச்சேரி 2 கோல்கள் பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற போட்டியில் இருசாராரினதும் குறிப்பாக சாவகச்சேரி மாணவர்களினது விளையாட்டுத் தரம் உயர்வாகக்காணப்பட்டது. இருசாராரும் அடுத்தடுத்து கோல்கள் போட்டுக் கொண்டேயிருந்தார்கள். இடையே மழை பெய்து கொண்டிருந்த போதும் ரசிகர்கள் நனைந்து கொண்டே போட்டியை ரசித்தனர்.

சாவகச்சேரிக் கோஷ்டி முன்னணி வீரரான ஜெ. அன்ரன் அடுத்தடுத்து 3 கோல்களைப்போட்டு ஒரு "சபாஷ்" பெற்றுக்கொண்டார். போட்டி முடியும் தருணத்தில் இருசாராரின் கோல்கள் 4—4 ஆக இருந்தது. போட்டி முடிவதற்கு ஒரு சில விநாடிகள்தான் இருந்தன. அந்தச் சமயத்தில் சாவகச்சேரியின் முன்னணிவீரரான சி. செல்வசிவம் யாரும் எதிர்பாராத விதமாக 'மின்னல்' வேகத்தில் ஒரு கோலைப்போட்டதும் சாவகச்சேரி வெற்றி பெறுவதற்கு வழிபிறந்தது இக்கோலுடன் போட்டி முடிவடைந்தது. இப்போட்டி முடிவில் சாவகச்சேரி 5—4 கோல்களால் உடுப்பிட்டியைத் தோற்கடித்தது

## அடாத மழையிலும் போட்டி

இதையடுத்த போட்டியில் பரமேஸ்வராக் கல்லூரியும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதின. இப்போட்டியும் ஆரம்பமாக மழையும் தொடங்கியது. கொட்டும் மழையில் மின்னல் வேகத்தில் பந்து சுற்றிச்சுழல ஆரம்பித்தது. இரு சாராருமே விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டனர். இடைவேளைக்கு இன்னும் சில நிமிடங்கள்தான் இருந்தன. வெள்ளம் மைதானத்தை மூடிக்கொண்டது. இதனைத் தொடர்ந்து மத்தியஸ்தர் திரு. கே. கிருஷ்ணன் போட்டியை நிறுத்திக் கொண்டார். ஒருவரும் கோல்கள் போடவில்லை. இவ்விரு போட்டிகளும் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றன.

# விளையாட்டு மைதானமில்லாததால் 'டிறிபேக்' மாணவர்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரியிலுள்ள டிறிபேக் கல்லூரியில் விளையாட்டு மைதானம் இல்லாததால் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இக்கல்லூரியின் விளையாட்டுமைதானம் சுமார் ஒரு மைல் தூரத்திலிருப்பதால் அங்கு சென்று பயிற்சிபெறுவது மாணவர்களுக்குப் பெரும் கஷ்டமாகவிருக்கிறதென்றும் உடற்பயிற்சி ஆசிரியரும் சிறந்த பயிற்சியை மாணவருக்கு அளிக்கமுடியாதிருக்கிறதென்றும் மழை காலங்களில் இந்த மைதானத்திலும் வெள்ளம் ஏற்பட்டுவிடுகிறதென்றும் கூறப்படுகிறது.

இக்கல்லூரிக்கு அருகாமையில் விளையாட்டு மைதானமொன்று அமைத்துக்கொடுக்குமாறு இப்பகுதி எம்.பி.யிடமும், கல்விப் பகுதி அதிகாரிகளிடமும் பல தடவைகள் கோரியபொழுதிலும் இதுவரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

## பயிற்சிபெற இத்தாலிக்கு பயணமானர்

யாழ்ப்பாணம் வெள்ளி

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் தெல்லிப்பளை இழவைச் சேர்ந்த திரு. கிருஷ்ணர் இராசரத்தினம் அகில உலகத்தொழிற் சம்மேளனத் திட்டத்தின் கீழ் உயர்தர இயந்திரத் தொழிற்சாலைப் பயிற்சி பெறுவதற்காக, ஐ.பி.ஓ.சி மூலம் இத்தாலி நகரத்திற்குச் சென்றுள்ளார்.

இவர் [illegible] இத்தாபனத்தில் தொழிற்சாலை மேற்பார்வையாளராகப் பதவியேற்று முன்னரும் இவ்வகைப் பயிற்சிக்காக வட இந்தியா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் உடுவில் மான் உயர் தரக் கல்லூரியின் பழைய மாணவராவார்

## புதியவர்கள் நியமனம்

சுழிபுரம், வெள்ளி

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் முக்கிய பதவிகளை வகித்த நான்கு ஆசிரியர்கள் கல்வி இலாகாவின் சுற்று நிருபத்தை அனுசரித்து இராஜினாமாச் செய்துள்ளனர்.

காலியான இடங்களுக்கு புதியவர்களை தெரிவுசெய்வதற்காகஒரு விசேஷபொதுக் கூட்டம் சங்கமண்டபத்தில் நடைபெற்றது. தலைவராக திரு. எஸ். பொன்னம்பலமும், தனாதிகாரியாக திரு. பொ. அப்பாபிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 12,000 பேர் வெளியேற்றம்

மியாமி (புளோரிடா) அக் 7

கடுமையான சூறவளி காரணமாக ஹவானா பகுதியில் 18,000 பேர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலத்த மழை காரணமாக கியூபா தலைநகரில் 12 அங்குல மழை பெய்திருக்கிறது. வெள்ளத்தினால் ஐவர் பலியானார்கள்.

(பி. டி. வி)

## உலக சம்மேளனத்தில் இலங்கையும் சேர்ந்தது

லண்டன் அக் 7

இலங்கை வாலிபர் விடுதிகள் சங்கம், சர்வதேச வாலிபர் விடுதி சம்மேளனத்தில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டது. 34 வருடங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட இந்தச் சம்மேளனத்தில் 42 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

இந்திய உப-கண்டத்திலிருந்து இந்தச் சம்மேளனத்தில் சேர்ந்த [illegible] மூன்றாவது [illegible] யாகும்.

## தமிழில் இல்லை

மல்லாவி, வெள்ளி

தந்திக் காசுக்கட்டளைப் படிவங்களில் தமிழ் மொழி சேர்க்கப்படவில்லை. ஆனால் துணுக்காய் தபால் நிலையத்தில் தமிழ்ப்படிவங்களும் இல்லை. தமிழ்படிவம் தருமாறு கேட்டால் இல்லை என்றே கூறுகின்றார்கள். தமிழில் அனுப்பும் காசுக்கட்டளைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்புகிறார்கள்.

## அல்ஜீரிய பிரதமர் பெல்கிரேட் விஜயம்

பெல்கிரேட், அக் 7

அல்ஜீரிய பிரதமர் இன்று பெல்கிரேட் வந்து சேர்ந்தார். அவர் யுகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுடன் சர்வதேச பிரச்னைகள் குறித்து பேச்சுக்கள் நடத்துவார்.

யுகோஸ்லேவியாவில் ஐந்து தினங்கள் தங்கியிருக்கும் அல்ஜீரியப் பிரதமர் டிட்டோவுடன் பேச்சுக்கள் நடத்துவதுடன் யுகோவின் பல பகுதிகளுக்கும் அவர் சுற்று விஜயம் செய்வார்.

அல்ஜீரியப் பிரதமர் இங்கு வருவது இது முதற் தடவையல்ல. கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் இவர் ரஷ்யாவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் இங்கு விஜயம் செய்து யுகோஸ்லேவிய உப அதிபருடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அண்மையில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் முத்தரப்பு மகாநாடு குறித்து அதிபர் டிட்டோ அல்ஜீரிய பிரதமருடன் பேச்சுக்கள் நடத்துவார் என்றும் கூறப்படுகிறது.

## புதிய சட்டங்கள்

மாஸ்கோ, அக். 7

சோவியத்யூனியனுக்கு எதிராக எழுதும் எழுத்தாளர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கும் புதிய சட்டங்கள் இப்பொழுது வெளியாகியுள்ளன.

## நீதிமன்றம் நாடுகிறது

ஹேக், அக். 7

ஸ்பெயினுக்கும் பிரிட்டனுக்குமிடையேயான ஜிப்ரோல்டர் தகராறு, ஹேக்கிலுள்ள சர்வதேசநீதிமன்றத்துக்குச் செல்லவிருக்கிறது.

## இந்தியாவுக்கு நேபாள அரிசி

காட்மாண்டு, அக். 7

இந்தியாவுக்கு 4000 தொன் அரிசி விற்பனை செய்ய நேபாளம் சம்மதம் தெரிவித்துள்ளது.

## சண்முகதாசன் புறப்பாடு

பீக்கிங், அக் 7

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. சண்முகதாசன் நேற்று இங்கிருந்து, இலங்கைக்கு விமானத்தில் புறப்பட்டதாக சீன செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

(பி. டி. வி.)

## ஜோன்சன் விஜயம்

கான்பரா, அக் 7.

அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்சன் இம்மாதம் 19-ம் திகதி நியூசிலாந்துக்கு விஜயம் செய்வார். 20-ம் திகதி அவர் [illegible]

(பி. டி. வி)

# 1-ம் பிரிவில் ஹாட்லி கல்லூரி; 2-ம் பிரிவில் ஹென்றிஸ் வெற்றி

பண்டத்தரிப்பு, வெள்ளி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், இளவாலை சென்கென்றிஸ் கல்லூரிக்குமிடையே அண்மையில் 1-ம், 2-ம், பிரிவுக்கான சினேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது 2-ம் பிரிவுக்கான ஆட்டத்தில் கென்றிஸ் வீரர் நாலு கோல்கள் போட்டனர். ஹாட்லிக் கல்லூரியினர் மூன்று கோல்களைப்போட்டனர். இப்போட்டியில் கென்றிஸ் வீரா ஒரு கோலால் வெற்றி பெற்றனர். திரு. ஜெயபாலன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்.

முதலாம் பிரிவுக்கான போட்டியில் இரு கோஷ்டிகளும் பலமாக மோதிக்கொண்டன. ஹாட்லிக் கல்லூரி வீரர் மூன்று கோல்களைப்போட்டனர். கென்றிஸ் வீரர் ஒரு கோல் மட்டும் போட்டனர். இடைவேளைக்குப்பின்னரும் ஆட்டம் விறுவிறுப்பாகவேயிருந்தது. கடைசி மூன்று நிமிடத்தில் கென்றிஸ் வீரர்கள் மூன்று கோல்கள் போட்டனர். ஹாட்லிக்கல்லூரிவீரர் இரண்டு கோல் போட்டு தமது எண்ணிக்கையை ஐந்தாக்கிக்கொண்டனர். இப்போட்டியில் ஒரு கோலால் ஹாட்லிக் கல்லூரி வீரர் வெற்றிபெற்றனர். திரு. வேதாபரணம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். போட்டிகள் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

# நாடகக் கலையில் பாடசாலைகள் அசிரத்தை

## உதவி வித்தியாதிபதி கவலை

நல்லூர், வெள்ளி

'தமிழர் தமது கலை, கலாசச்சாரம் முதலியவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்' இவ்வாறு பரமேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் கலைக்கழகத்தினர் நடாத்திய தமிழ் நாடகப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கிய வடபிரதேச வித்தியாதிபதி திரு. தணிகாசலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அன்னியர் ஆட்சிக் காலத்தில் எமது, கலை, கலாச்சாரம் முதலியன போற்றுவார் இல்லாமல் அழிந்துபோயிற்று. ஆனால் எமக்குச் சுதந்திரம் கிடைத்தபின்னர் எமது அரசாங்கம் கலாச்சார அலுவலகம் என்னும் ஓர் அலுவலகத்தைத் தொடக்கி நமக்கு நமது கலாச்சாரத்தைப் பேண வழிவகை செய்து தந்து கொண்டு இருக்கின்றது. பாடசாலைகள் ஏராளமாக இங்கு காணப்பட்டும் அவை இப்பாடசாலை நாடக விழாவில் பங்கு கொள்ளாதது வருந்தத்தக்கது என்றார். திறமையுள்ள ஆசிரியர்களும் திறமைசாலிகளான மாணவரும் இப்படியான சந்தர்ப்பங்களைத் தவறவிடக்கூடாது என்றும் அவர் கூறினார்.

கலாநிதி வித்தியானந்தன் நன்றியுரை கூறுகையில் கடந்த காலங்களில் நாட்டுக்கூத்து அழிந்து போய் இருந்தது. ஆனால் அவை திரும்பவும் உயிர்த்துடிப்புடன் மேலோங்கி வருவது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். இந்நாட்டுக் கூத்துக்கள் பொதுமக்களிடம் மட்டும் இன்று இல்லாமல் பல்கலைக்கழகம் வரை சென்றுள்ளது. வரவேற்கத்தக்க தொன்றாகும் என்றார். அவர்தொடர்ந்து பேசுகையில் பெண்கள் முன்வந்து இந்நாட்டுக்கூத்து கலை நடாத்தியும்நடித்தும வருவது வரவேற்கத் தக்கதொரு காரியம்என்றார்

மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரியின் உத்தமன் பரதன் என்னும் நாட்டுக்கூத்தும் புலோலி ஆண்கள் பாடசாலையினரின் நாவுக்கரசர் என்னும் நாடகமும் நடந்து முடிந்த பின்னர் பரிசு பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், வியா

சுழிபுரம் ஐக்கியநாணய சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. சு கந்தசுவாமி ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஜே. பி., உபதலைவர் திரு. க. தம்பிராசா பி. ஏ., செயலாளர் திரு. சு. நல்லதம்பி, உப செயலாளர் திரு. சி. கந்தசாமி, தனாதிகாரி: சு. சண்முகரத்தினசாமா, உப தனாதிகாரி: செ. இராசதுரை, நிர்வாகசபை உறுப்பினர்கள்: [illegible]நிர்வாணர்கள்: சி. இரத்தினவேல், கி. அப்புத்துரை, இ கணபதிப்பிள்ளை' அ. கணபதிப்பிள்ளை, க. சிவானந்தன், சி. முருகேசு, க. ஆறுமுகசுவாமி, க. குமாரசாமிக் குருக்கள், திருமதி இ. தில்லையாச்சி.


# ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களைப் புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலயங்களுக்குத் தேவையான

தற்காலிக கட்டட தளபாடங்கள்

ஆகியவற்றுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

45, அம்பலவாணர் ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 7024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பஸ்சாரதிகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் பஸ்களை மெதுவாகவே அங்கிருந்து புறப்படவேண்டும் என்று பஸ் சாரதிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பஸ் நிலையத்திலிருந்து பஸ் புறப்படும் பொழுது பஸ் சாரதிகள் வேகமாக ஓட்டுகின்றனர் என்றும் இதன் விளைவாக பிரயாணிகள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள் என்றும் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே மராமத்துப் பகுதி எஞ்ஜினியர் பஸ் சாரதிகளுக்குப் புதிய எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு பஸ் நிலையத்திலிருந்து விரைவாகப் புறப்படும் பஸ் சாரதிகள் மீது இனிமேல் நடவடிக்கை எடுக்கப்படும், பஸ் நிலையத்திலிருந்து பஸ் புறப்படும் பொழுது ஏறுகின்ற பிரயாணிகள் முன்னர் பல கஷ்டத்துக்குள்ளானார்கள் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இடிந்து விழும் நிலையில் தமிழ் பாடசாலை கட்டிடம்

## கல்வி வித்தியாதிபதிக்கு எம்.பி. தந்தி

திருநெல்வேலி, வெள்ளி

"நூற்று இருபத்து ஐந்து வருடத் தொன்மை வாய்ந்த இப்பாடசாலையின் கட்டடத்தை உடன் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுங்கள். இல்லாவிட்டால் அதனால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் உயிர்ச்சேதங்களுக்கு கல்வி இலாகாவே பொறுப்பேற்க நேரிடும்."

மேற்கண்டவாறு ஒரு அவசரத் தந்தியை கோப்பாய் எம்.பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை வித்தியாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

நீர்வேலியிலுள்ள இலங்கை சேர்ச் தமிழ்க் கலவன் பாடசாலையின் கட்டடங்கள் இடிந்து விழுந்து கொண்டிருப்பதால் அதனை உடன் திருத்துமாறு கோரி அவர் அனுப்பியுள்ள தந்தியில் "இது விஷயமாக ஏற்கனவே வடமாநில கல்வி அதிகாரிக்கு அறிவித்தும் அவர் கவனமெடுக்கவில்லை" யெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தபாலில் தந்தி கிடைத்தால்...

கொழும்பு, வெள்ளி

உடனடியாக வராது தபாலில் வந்து சேரும் தந்திகளுக்கு இனிமேல் அதற்குரிய பணம் கொடுக்கப்படவிருக்கிறது. தந்திகள் எதுவும் தபாலில் கிடைத்தால் உரியவர், தபாற் செலவு (10 சதம்) தவிர்த்து தந்திக்குரிய கட்டணத்தை தபால்நிலையத்தில் கோரலாம்.

## தடுப்பு ஊசி

இமையாணன், வியா.

நேற்று உடுப்பிட்டி அ.மி. பாடசாலையின் கல்லூரியின் ஆசிரியர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் நெருப்புக் காய்ச்சல் தடுப்பு ஊசி போடப்பட்டது.

## கோப்பாயில் மருந்து தட்டுப்பாடு

திருநெல்வேலி, வெள்ளி

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் மருந்துகள், ஊசிமருந்துகள், புண்களுக்குக் கட்டும் துணி ஆகியனவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அவைகளை உடன் அனுப்பிவைக்குமாறு சுகாதார அமைச்சருக்கு கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தந்தி மூலம் கேட்டுள்ளார்.

மேற்படி வைத்தியசாலைக்கு நேற்றையதினம் திரு. கதிரவேலுப்பிள்ளை நேரில் சென்று பார்வையிட்டு இவைகளை அறிந்து கொண்டார்.

# கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் மரணம்

## காப்பாற்றச் சென்ற சிறுமியும் கிணற்றில் விழுந்து பலியானாள்

யாழ்ப்பாணம், சனி

கிணற்றில் தவறி விழுந்து உயிர்நீத்த ஒரு சிறுவனைக் காப்பாற்றச் சென்ற ஒரு சிறுமி எதிர்பாராதவிதமாக அந்தக் கிணற்றுக்குள்ளேயே விழுந்து மரணமான சம்பவம் தயிலுதியில் நிகழ்ந்துள்ளது.

தயிலுதியிலுள்ள ஒரு வீட்டு வளவில் விளையாடிக்கொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுவன் அங்கிருந்த கிணற்றில் தவறி விழுந்து மரணமானான். இச்செய்தியைக் கேள்வியுற்ற தேவி என்றழைக்கப்படும் 13 வயதுடைய ஒரு சிறுமி அந்தச் சிறுவன் உயிருடன் போராடிக்கொண்டிருப்பதாகக் கருதி கிணற்றில் குதித்தாள். கிணற்றில் மிதந்த அந்தச் சிறுவனை வாரி அணைத்து வெளியே கொண்டுவரும் பொழுது தவறி விழுந்து மரணமானாளென்று விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

# எதிரி கமிஷன் தரும்படி கேட்டாராம்

## லஞ்ச ஊழல் வழக்கில் முடிக்குரிய தரப்பு விளக்கம்

கொழும்பு, வெள்ளி

திருமதி பராசக்தி டூல்வெல என்பவர் மீது லஞ்ச ஊழல் குற்றம் சுமத்தி தொடரப்பட்டுள்ள வழக்கு கொழும்பு தற்காலிக நீதிபதி திரு. கோலட் ஜயவர்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. தயா பெரேரா தமது சாட்சியை எடுத்துரைக்கையில் கூறியதாவது:

ஐவன் சமகனகே என்பவர் குதிரைப்பந்தய மைதானத்தில் நடைபெற்ற கைத்தொழில் கண்காட்சி சம்பந்தமாக ஒரு 'டெண்டர்' சமர்ப்பித்திருந்தார். அது அனுமதிக்கப்படவில்லை. அதனால் தமது நண்பரான ஆதி ஹெட்டி என்பவரைப் போய் பார்த்தார். அவர் திருமதி பண்டாரநாயகாவின் நண்பர். தமக்கு நியாயம் கிடைக்கும்படி செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இதுகைத்தொழில் அமைச்சரின் பொறுப்பில் உள்ள ஒரு விஷயம் என்றும் தமது நண்பர் ஒருவர் திரு மைத்திரிபாலாவுக்கு தெரிந்தவர் என்றும் அவரிடம் அழைத்துச் செல்வதாகக் கூறினார். பின்னர் திருசமகனகேயை திருமதி அதிஹெட்டி திருமதி டூல்வெலவிடம் கூட்டிச் சென்றார். திருமதி டூல்வெல தம்மால் அந்த விஷயத்தை முடித்துத்தர முடியும் என்றும். ஆனால் திருமைத்திரிபாலாவுக்கு 25 வீதம் கமிஷன் கொடுக்க வேண்டும் என்றும் ஆனால் ஆதிஹெட்டி மூலம் வந்திருப்பதால் அதை 10 வீதமாகக் குறைக்கலாம் என்றும் தமக்கு 5 வீதம் கமிஷன் தரவேண்டும் என்று கூறிய தோடு பணத்தை முன்னதாகவே கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். பிறகு சமகனகே வேறுபலரையும் திரு. மைத்திரிபாலாவையும் போய் பார்த்தார். அதன் பின்னர் 1965 ஏப்ரல் 5-ம் திகதி லஞ்ச விசாரணைக் கமிஷனிடம் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

முடிக்குரிய தரப்பில் திரு. சமகனகே சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். எதிரி தரப்பில் திரு. எஸ். நடேசன் கியு. சி. ஆஜரானார்.

## தபாற் பைகளை வைத்திருந்தனராம்

### இருவர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், சனி

தபாற்கந்தோருக்கு சொந்தமான தபாற் பைகளை வைத்திருந்ததாகக் கருகரைச் சேர்ந்த பற்றிக் கிரகெம், சோதி சந்தியா ஆகியோர்மீது கரையூர்ப் பொலிஸாரினால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்திரேட் திரு. எஸ். சி. கதிரவேலு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் இருவரும் சுற்றவாளிகளெனத் தெரிவித்தனர். எதிரிகள் சார்பில் புரக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார். மாஜிஸ்திரேட் 28ந் தேதி ஒரு வழக்கையும், 67ம் ஆண்டு ஜனவரி 4ந் தேதிக்கு மற்ற வழக்கையும் ஒத்திவைத்தார்.

## பணங்கட்ட மறுத்தார்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கம்பர் மலையைச் சேர்ந்த கந்தன் வைரவன் என்பவர் அவரது மனைவியான அன்னம் என்பவருக்கு நான்குமாத ஜீவனாம்சப் பணமாக 90 ரூபா 40 சதம் கட்டமுடியாதென பருத்தித்துறை நீதிபதி திரு. ருெபேர்ட் சில்வா முன்னிலையில் தெரிவிக்கவே, நீதிபதி வைரவனை இம்மாதம் 23-ந் திகதிவரை விளக்கமறியலில் இருக்கும்படியும் அல்லது 100 ரூபா பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

# முதலாளி-தொழிலாளி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களையும் அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

இது மாத்திரமல்ல, இந் நீதிமன்றங்களுக்கு வரும் தகராறுகள் காரணமின்றி நீடிக்கப்படாது, எவ்வளவு விரைவோ அவ்வளவு விரைவில் தீர்வு காண்பதற்கான வகையில் அவற்றின் அமைப்பும், அதிகாரங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தொழில் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்வதற்கென, முதலாளிகளின் பிரதிநிதி ஒருவரும், தொழிலாளர்களின் பிரதிநிதி ஒருவரும், எவ்வித சார்புமற்ற, ஆனால் தொழிற்சங்கச்சட்டங்களுடன் பரிச்சயமுள்ள நடுநிலைமை நீதவான்கள் மூவருமாக ஐவர் அடங்கிய உயர்நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டால், அது தகராறைத் தீர விசாரித்து நல்ல தீர்ப்பொன்றை வழங்குவதற்குத் தகுதி வாய்ந்ததாக அமையும்.

நீதியான சட்டங்கள், அதிக அதிகாரம் வாய்ந்த நீதிமன்றங்கள், நேர்மையான மனப்பான்மையுள்ள சோஷலிச அரசாங்கம் இவைகள் இந்நாட்டில் ஏற்பட்டால் முதலாளி-தொழிலாளி உறவு எவ்வளவோ தூரம் முன்னேறவழியுண்டு.

இவற்றுக்கும் மேலாக, முதலாளியும் தொழிலாளியும் தத்தம் மனப்போக்கை மாற்றவேண்டும். ஒவ்வொருவரும் இருவேறு துருவ நிலைகளில் நின்று கொண்டு பிரச்சினைகளை அணுக முற்படாது, இருவரது நலன்களையும் பாதுகாத்து, அதன் மூலம் தமது ஸ்தாபனத்தின் நலனையும், சமூகத்தின் நலனையும், மேலாக நாட்டின் நலனையும் பாதுகாக்கவழி செய்ய வேண்டும். இதற்கு விரிந்த உள்ளமும், மனிதாபிமானம் நிறைந்த உள்ளமும் தேவை.

## சிரமதானத்தில் 600 தொண்டர்

காந்திபுரம், வெள்ளி

காந்திஜெயந்தி தினத்தில் இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் தருமபுரம் கிளையினர் மேற்கொண்ட சிரமதானப்பணி சிறப்பாகநடைபெற்றது.

சிரமதானத் தொண்டர்களை திரு. க. சங்கரப்பிள்ளை வரவேற்றுப் பேசுகையில், தொண்டர்கள் இன்று பங்கு கொள்ளும் சிரமதானம் வருங்காலத்தில் இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கூடங்களில் இனிமேல் நாற்காலிகளும் மேசைகளும் போடப்படமாட்டாது. வேண்டுமானால் மாணவ மாணவிகள் பள்ளிக்கூடத்துக்கு வரும்போதே தங்கள் தங்கள் ஆசனங்களை கொண்டுவரட்டும்' என்று கல்வி இலாகாத் தலைவரும் சட்டம் பிறப்பிக்கலாமல்லவா?

பின்பு எதற்காகத் தான் பொதுமக்களின் வரியைக் கொண்டு கொழுத்த கொழு சம்பளங்களை வாங்கிக் கொண்டு ரஙிபாலா முதலியோர் இருக்கிறார்கள் என்று நீங்கள் கேட்கப்படாது. இதுவும் சிரமதானத்தில் ஒரு பகுதியாகும்.

-- வழிப்போக்கன்

பேச்சளவில், எழுத்தளவில், லட்சியமளவில் இவற்றை வைத்துக் கொள்ளாது, பிறநாடுகளிற்போல் நாமும் செயலில் இறங்க வேண்டும். இறங்கினால், பிரச்சினைகள் தீரவழி பிறக்கும். உற்பத்தி பெருகும். நாடு செழிக்கும். குடும்பங்கள் மகிழும். எல்லோரும்-முதலாளி, தொழிலாளி உட்பட- இன்பமுற்றிருக்கலாம்,

## மீன்பிடிக்க. . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களைக் காணவில்லை, "சழமணி" என்னும் இயந்திரப் படகில் எஸ். செகனப்பு, எஸ். சினன், சுழிபுரத்தைச் சேர்ந்த மற்றுமொருவர் ஆகிய மூவரும் மீன்பிடிக்கச் சென்றார்கள் என்று கூறப்படுகின்றது. மற்றப்படகில் எம். மத்தியாக, ம. யேசுராசா, செ. மரியதாஸ் ஆகிய மூவரும் சென்றுள்ளதாகவும் 'தமிழரசி' என்னும் பெயரைக்கொண்ட மற்றதில் ஏ. கருணைகடாட்சகுரு மற்றும் இருவர்கள் போனார்கள் எனவும் அறியப்படுகிறது.

மேலொரு இயந்திரப் படகில் உள்ள மீன்பிடி வலைகள் காணமற்போனதால் அதில் சென்றவர்கள் வலையைத் தேடி நிற்பதாக திரும்பிவந்துள்ள இயந்திரப் படகுக்காரரிடம் செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

மீனவர்களின் உற்றார் உறவினர், சிநேகிதர் மற்றும் பார்வையாளர்கள் எல்லோரும் கடற்கரையில் கடலை நோக்கியவண்ணமாய் நிற்கிறார்கள். இவ்இயந்திரப்படகில் சென்றவர்களைத் தேடி அனேக படகுகள் சென்றுள்ளது. சூறவளியின் பின் இதுதான் அடுத்த அபாயம் என்று மக்கள் புலம்புகிறார்கள். இவர்களின் பரிதாபத்தைக் கேட்டு அனேகர் கரையைத்தேடி வருகிறார்கள். இப் படகுகளுடன் சென்ற படகுகள் சில கரைக்கு வந்துவிட்டன.

## பிரிவிகவுன்சி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எனது சகோதர நீதியரசரின் கருத்து என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் என்கருத்து இதுதான் என்று கூறிய நீதியரசர் அபயசுந்தர பெரும் பான்மையான யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் குடியியல் உரிமைகளை பாதித்துள்ள இந்த சம்பவம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும் என்று குறிப்பிட்டார்.

நீதியரசர் அபயசுந்தர தமது கருத்தை தெரிவித்த பின்னர் திரு. துரையப்பாவின் மனுவை அனுமதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

## ரசிகர் ஆவல் இன்று தீரும்

யாழ்ப்பாணம், சனி

இன்று யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறுகிறது. ரசிகர்கள் வெகுநாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இப் போட்டி சென்றவருடம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.


மாற்றம்

நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

எம். ஜி. இராமச்சந்திரன்

பி. சரோஜாதேவி

நடித்த

நீதிக்குப்பின் பாசம்


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org